இந்தோநேஷியா

*

கே. அருணசலம்
எழுதியது.

*

சக்தி காரியாலயம்
சென்னை, மதுரை, கோவை, திருநெல்வேலி

இன்றைய தினசரிப் பத்திரிகைகளில் இந்தோனேஷியா பற்றியும் டாக்டர் சுகர்ணு பற்றியும் அடிக்கடி விஷயங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்தோனேஷிய அரசியல் இயக்க வளர்ச்சி, சுதந்திரப் போர், இந்திய-இந்தோனேஷிய ஒற்றுமை அம்சங்கள் ஆகியவற்றை ஸ்ரீ கே. அருணுசலம் சுருக்கமாக இந்தச் சிறு புத்தகத்தில் விளக்கி யிருக்கிறார்.

முதல் வெளியீடு மார்ச் 1946.

விலை அணு
12

சேலம் லக்ஷ்மிவிலாஸ் பிரஸ், 50-51, வாலாஜா ரோடு,
மவுண்டு ரோடு, சென்னை.

மர்டேகா

இந்தோனேஷிய சுதந்தர கீதம்

(மர்டேகா என்றால் சுதந்தரம் என்று பொருள். சுதந்தர கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு கீழே தரப்பட்டிருக்கிறது.)

என்னருமை நாடு இந்தோனேஷியா
யான் பிறந்த நாடு இந்தோனேஷியா (என்னருமை)

ஏறுபோல வீறு கொண்டு
எனது மண்ணில் நிற்கிறேன்
என்னருமை நாடு இந்தோனேஷியா
யான் பிறந்த நாடு இந்தோனேஷியா (என்னருமை)

என்னருமை அன்னை போல
எனதியக்கம் போற்றுவேன்
என்னைப் பெற்ற அன்னை நாடு
ஈன்ற பேரைப் போற்றுவேன் (என்னருமை)

சேர வாரும் சேர வாரும்
செல்வி பெற்ற சோதரீர்
ஆரவாரும் ஆரவாரும்
அன்னை தந்த வளமெல்லாம் (என்னருமை)


எனது நாடு எழில் தழைத்து
ஏற்றங் கொள்ளப் போற்றுவீர்
மனது நிறையப் பக்தி கொண்டு
மாதவளை ஏற்றுவீர் (என்னருமை)

வாழ்க வாழ்க எனது நாடு
வாழ்க என்றன் நாட்டினர்
வாழ்க வாழ்க எனது தேகம்
வாழ்க வாழ்க வாழ்கவே (என்னருமை)

எழுந்து நில்லு எழுந்து நில்லு
என்னருமைத் தேயமே
என்று மெங்கும் யான் தயாரென்
றெழுந்தி ரென்றன் தேயமே (என்னருமை)

இன்பமிக்க எனது நாட்டின்
இசை பரந்து ஓங்கிட
செழுமை மிக்க எனது நாட்டின்
சிவனே எழுந்திராய் (என்னருமை)

தாயகத்தைப் போற்றுகின்றேன்
தகைவுடன் எழுந்திராய்
சுதந்தரத்தின் கோயி லோங்க
சுபிட்சம் பொங்க எழுந்திராய் (என்னருமை)



பிரஸிடென்ட் ஸுகர்னோ (குல்லாயுடன் உள்ளவர்), உதவி பிரஸிடென்ட் ஹாட்டா,
ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை இந்தோனேஷிய ஸோல்ஜர்கள் பரிசீலனை செய்கிறார்கள்.

இந்தோனேஷியா

1

அப்போதும் இப்போதும்

இந்தியாவுக்குப் பக்கத்தில் உள்ள நாடுகளைப் பற்றி இந்தியருக்கு குறைவாகவே தெரியும். ஆனால் ரொம்ப தூரத்தில் உள்ள பிரிட்டனின் மூலைமுடுக்குகள் எல்லாம் அவர்களுக்கு புத்தகங்கள், சினிமாக்கள், பத்திரிகைகள் மூலம் நன்றாகத் தெரியும். தெரிந்து கொள்ள பிரிட்டிஷ் சர்க்காரும், அவர்களுடைய ஏஜன்ஸிகளும் இந்தியருக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றன. பிரிட்டிஷ் சரித்திரம் படித்தாக வேண்டுமென்ற கட்டாயம் இந்தியாவில் இருக்கிறது. இதர ஐரோப்பிய நாடுகளுடைய சரித்திரங்கள் எல்லாம் கூட நமக்கு நன்றாகப் போதிக்கப்படும். ஆனால் இந்தியாவுக்குப் பக்கத்தில் உள்ள நாடுகள், அதுவும் அரைகுறை அடிமை நாடுகள், முழு அடிமை நாடுகள் என்றால், போதிய தகவல்கள் இந்தியருக்குக் கிடைப்பதில்லை. அந்நாடுகளைப் பற்றி அவ்வப்போது போதிய செய்திகளை பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனங்கள் இந்தியாவுக்கு அனுப்புவதில்லை. அதேபோல அந்த வெளி நாடுகளிலும் இந்தியாவைப் பற்றி செய்திகள் பஞ்சமாகவே இருக்கும். பெர்ஸியா, இராக், ஸிரியா, லெபனான், பாலஸ்தீனம், அபிஸீனியா, இந்தோ-சீனா, இந்தோனேஷியா ஆகியவற்றை இந்த ரகத்தில் சேர்க்கலாம். உலக ஏகாதிபத்திய வல்லரசுகள் சமாதான காலத்தில் பரஸ்பர ஒத்துழைப்புக் கொள்கையைப் பின்பற்றுவதால், அடிமை மக்கள் பரஸ்பரமாக தங்கள் உண்மையான நிலைமையை அறிந்து கொள்ள முடிவதில்லை.

உலக யுத்தத்தின் விளைவாக சில நாடுகள் சுபிட்சமடைவதுண்டு. மற்றும் சில நாடுகள் க்ஷீணமாவதுமுண்டு. யுத்த காலத்தில் பெரிய வல்லரசுகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளுவதால் அவற்றின் கீழ் அடிமைகளாக உள்ள நாடுகள் விடுதலைபெற சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதைப்போல சந்தர்ப்பம்தான் இந்தோனேஷியாவுக்கு இரண்டாவது உலக மகாயுத்தத்தின் விளைவாகக் கிடைத்தது. 350 வருஷகாலமாக அன்னிய ஆட்சியால் வதக்கப்பட்ட மக்கள், கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிடவில்லை.

ஜப்பானியர் யாதொரு எச்சரிக்கையுமின்றி 1941-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 7-ந்தேதி பெர்ல் ஹார்பரைத் தாக்கி, மகா யுத்தத்திலிறங்கினர். அடுத்த தினம் அமெரிக்கா, பிரிட்டன், ஹாலந்து ஆகியவை ஜப்பான் மீது யுத்தப் பிரகடனம் செய்தன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள இந்தியாவின் பெயரால் பிரிட்டன் பிறர் மீது யுத்தம் தொடுத்ததுபோல, டச்சு (ஹாலந்து) சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகிய இந்தோனேஷியாவின் பெயரில் ஹாலந்து சர்க்கார் யுத்தப் பிரகடனம் செய்த தென்பதைச் சொல்லத் தேவையில்லை. 1942-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் இந்தோனேஷியா (டச்சிந்தீஸ்) விலிருந்து டச்சு ஆட்சியை ஜப்பானியர் ஒழித்துக் கட்டினர். அதிலிருந்து ஜப்பான் சரணடைந்த தேதி (ஆகஸ்டு 14, 1945) வரை இந்தோனேஷியாவில் எப்பேர்ப்பட்ட ஆட்சி முறை நிலவியது என்பதை வெளி உலகம் அறிந்து கொள்ள முடியவில்லை. ஜப்பான் சரணாகதியான பிற்பாடுதான் இந்தோனேஷியாவில் 3½ வருஷகாலமாக எப்பேர்ப்பட்ட ஆட்சியிருந்தது, ஜப்பானுடைய ஏகாதிபத்திய பேராசைகளை இந்தோனேஷியர் எவ்வாறு எதிர்த்தார்கள் என்பவையெல்லாம் வெளி உலகுக்குக் கொஞ்சம், கொஞ்சமாகத் தெரியலாயிற்று. ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு டாக்டர் சுகர்ணு காண்பித்த எதிர்ப்பு, அதே ஏகாதிபத்தியத்திற்கு நேதாஜி சுபாஷ் சந்திர

போஸ் காண்பித்த எதிர்ப்புக்கு சமமாகும். போஸ், சுகர்ணு இருவரும் தங்கள் சொந்த நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய வெளி உதவியை பெற்றுக்கொண்டு, அதேசமயத்தில் தங்கள் நாட்டுக்கு துளிக்கூட ஹானி ஏற்படாதவாறு பார்த்து வந்திருக்கிறார்கள். போஸ் சேனை, சுகர்ணு சேனை இரண்டின் உண்மையான வரலாறுகள், யுத்தம் முடிவடைந்து, தணிக்கை நீங்கிய பிற்பாடே யாவருக்கும் தெரியவந்தன.

ஹிட்லரின் குதிகாலின் கீழ் மிதிக்கப்பட்டுக் கிடந்த ஹாலந்து, நாஜிஸமும் பிறகு ஜப்பானிஸமும் ஒழிக்கப்பட்டவுடன், மறுபடியும் ஏகாதிபத்தியக் கொடியுடன் இந்தோநேஷியாவுக்கு வந்ததால்தான் இந்தோநேஷியரின் வீரமும், தீரமும் உலகுக்கு நன்றாகத் தெரிந்தன. இவ்வாறு உலகுக்குத் தெரிவிக்கும் பணியில் பிரிட்டனின் பங்கு கொஞ்ச நஞ்சமல்ல. பிரிட்டிஷ் உதவி கிடைக்காதென்றால் டச்சுக்காரர் கீழ்க் கோடிக்குத் திரும்பும் எண்ணத்தை கனவில் கூட வைத்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர்களால் தன்னந்தனியாக இந்தோநேஷியரை எதிர்த்து ஜெயிக்க முடியவே முடியாது. இதை டச்சுக்காரரே நன்கு உணருவர். ஆயுதம் தாங்க உரிமையின்றி டச்சு ஆட்சியில் இருந்த இந்தோநேஷியர், ஜப்பானிய நிர்வாக காலத்தில் ஆயுதத்தைத் தாங்கி, பிற்பாடு ஜப்பானியரையே தாக்கி, அதற்கும் பிற்பாடு டச்சு, பிரிட்டிஷ், பிரிட்டிஷ்—இந்தியப்படைகளைத் தாக்கித் தங்கள் சுதந்திர கோஷம் உலகமெங்கும் கேட்கச் செய்து விட்டார்கள்.

எனவே, யுத்தத்திற்கு முன்பு இருந்த இடம் பிரகாசமாகத் தெரியாதவர்களும், தெரியாதபடி ஏகாதிபத்யங்களால் 'இருளடிப்பு' செய்யப் பட்டவர்களுமான இந்தோநேஷியர், யுத்த முடிவில் தங்கள் சுதந்திர யுத்தம் மூலம் உலகச் செய்திகளில் முதன்மை ஸ்தானம் பெற்றனர்.

2

நாட்டின் அமைப்பு

இந்தோனேஷியா கிட்டத்தட்ட இரண்டாயிரம் தீவுகள் கொண்டது. மலாய் தீபகற்பத்திலிருந்து ஆஸ்திரேலியாவரை இந்தத் தீவுகள் பரவியிருக்கின்றன. இவற்றின் விஸ்தீரணம் 7,35,268 சதுர மைல்கள். ஜனத்தொகை 7,07,27,233. விஸ்தீரணத்தில் ஹாலந்தை விட அறுபது பங்கும், ஜப்பானை விட மூன்று பங்கும் உள்ளது இந்தோனேஷியா. ஜனத்தொகையில் ஹாலந்தை விட பத்து பங்கு அதிகமாகும். ஹாலந்தின் ஜனத்தொகையில் 100க்கு 20 பேர்கள் இந்தோனேஷியாவை நம்பி (சுரண்டல் மூலம்) வாழ்கிறவர்கள். எனவே, இந்தோனேஷியா தனது சுதந்திரப்போரில் வெற்றியை நிலைநாட்டினால் ஹாலந்தில் 100க்கு 20 பேர்கள் கதி அதோகதியாகி விடும். தேசத்தின் பொருளாதாரம் சிர்குலைந்து விடும்.

இந்தோனேஷிய ஜனத்தொகையில் 5,90,00,000 பேர்கள் சுதேசிகள். (இ வ ர் க ளி ல் பெரும்பாலோர் மலாய்கள்.) 12,50,000 பேர்கள் சீனர். 2,43,000 பேர்கள் ஐரோப்பியர். இந்தியர் உள்பட இதர ஆசிய மக்கள் 1,12,000.

இந்தத் தீவுகளில் முக்கியமானவை ஜாவா, சுமத்ரா இரண்டும்தான். விஸ்தீரணத்தில் ஜாவாவைவிட நான்கு பங்கு பெரியதாக சுமத்ரா இருக்கிறபோதிலும், ஜனத்தொகையில் ஜாவாவில் வசிப்பவர்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்குதான் சுமத்ராவில் இருக்கிறார்கள். ஜாவாத் தீவின் நீளம் 622 மைல்கள். அகலம் 55 மைல்களிலிருந்து 121 மைல்கள் வரையுள்ளது. இதன் விஸ்தீரணம் 48,504 சதுர மைல்கள். ஜனத்தொகை 4,20,00,000. அதாவது ஒரு சதுர மைலுக்கு 1,700 பேர்கள் வீதம் நெருக்கமாக வாழ்கிறார்கள். ஈக்வேட்டருக்கு அருகிலே இந்தத் தீவு இருப்பதால் எப்போதும இங்கே கோடைகாலம்தான். கடற் காற்று அடிப்பதால் உஷ்ணத்

தைத் தாங்க முடிகிறது; மழையும் பெய்கிறது. மொத்த நிலப் பரப்பில் 40 சதவிகிதம் சாகுபடியாகிறது. பாக்கியில் காடுகளும், மலைகளும் இருக்கின்றன. நதிகளில் அநேகமாக எல்லாம் வடக்கு நோக்கி ஓடுகின்றன. இவற்றில் இரண்டைத் தவிர பாக்கி நதிகள் கப்பல் போக்குவரவுகளுக்கு லாயக்கில்லை. ஆனல் அவை நீர்ப்பாசனத்திற்கு உபயோகப் படுகின்றன. சாகுபடி நிலப்பரப்பில் பாதிக்கு இந்த நதிகளின் நீர்ப்பாசனம்தான் கிடைக்கிறது.

ஒரு காலத்தில் ஜாவா சுதந்திர இந்திய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. இது ரொம்பப் பேர்களுக்கு அதிசயமாகத் தோன்றலாம். நமக்கு இவ்வளவு லட்சணமாக பள்ளிக்கூடங்களில் சரித்திரம் போதிக்கப்பட்டிருக்கிறது! 8-வது நூற்றூண்டிலிருந்து, அதாவது சைலேந்திரர் ஆட்சி காலம்முதல், ஜாவாவும் இந்தியாவும் நெருங்கிய உறவிலிருந்திருக்கின்றன. சோழ மன்னர் ஆட்சியின் கீழ் ஜாவா இந்திய ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. நெருங்கிய கலாசார உறவுகளிருந்தன. ராமாயண, மகாபாரத இலக்கியங்கள் இரு நாடுகளுக்கும் பொதுவானவை. ஜாவா சங்கீதம், நடனம் ஆகியவற்றில் ஹிந்துப் பண்பைக் காணலாம். இந்திய-ஜாவா கலையின் பிரதிபிம்பங்களாக பல கோயில்கள் இப்போதும் ஜாவாவிலிருப்பதைக் காணலாம். 1767-ஆம் வருஷம் வரை ஹிந்து ஆட்சியின் கடைசி சின்னம் அந்த நாட்டில் இருந்திருக்கிறது.

3

டச்சுப் பிரவேசம்

'யானைவரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பது போல, கீழ் நாடுகளுக்கு விநச காலம் வரும் முன்னே

விதேசி வியாபாரிகள் வந்தார்கள். பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனி 1599-ஆம் வருஷத்தில் பிரிட்டனில் நிறுவப்பட்டது. அதேபோல ஹாலந்தில் டச்சுக்கிழக்கிந்திய கம்பெனி 1602-ஆம வருஷத்தில் ஆரம்பிக்கப் பட்டது. தங்கள் நாட்டுப் பொருள்களை வெளிநாடுகளில் விற்று, வெளிநாடுகளில் உள்ள பொருள்களை பணம் கொடுத்தோ அல்லது பண்ட மாற்ற முறை மூலமோ வாங்குவதே அந்தக் கம்பெனிகளின் ஆரம்பகால தொழிலாக இருந்தது. இந்த வர்த்தகம் மூலம் அதிக நாகரிகத்தையோ அல்லது நலனையோ அடைந்தவர் மேல் நாட்டினர்தான். இந்தியாவிலிருந்து போன டாக்கா மஸ்லினைக் கண்டு ஐரோப்பா முழுமையும் பரவாசமாகி யிருக்கிறது. இந்த மஸ்லின் உடுத்தி, ரோமாபுரி சக்ரவர்த்தினி புளகாங்கிதமடைந்தாராம். அந்தக்காலத்தில் ரோமாபுரியே கிறிஸ்தவ நாகரிகத்தின் கேந்திர ஸ்தலமாகும். பருத்தியும் இந்தியாவிலிருந்து தான் முதன் முதலாக ஐரோப்பாவுக்குப் போயிற்று. அதற்கு முன்னல் அங்கே எல்லாரும் கம்பளி ஆடைகளைத்தான் அதாவது, ஆட்டுரோம ஆடைகளைத்தான் உடுத்தி வந்தார்கள். பிரிட்டனுக்கு முதலில் இந்திய பருத்தி போனவுடன், பிரட்டிஷார், "இதென்ன, இவ்வளவு வெண்மை யாக இருக்கிறது! இந்திய ஆடுகளுக்கு இப்பேர்ப்பட்ட நைஸான வெள்ளை ரோமம் உண்டா? நமது ஆட்டு ரோம வர்ணம் மங்கலாகவும், சொர சொரப்பாகவும் அல்லவா இருக் கிறது" என்றுர்கள். உண்மை சொல்லப்பட்ட பிறகுதான் பருத்தி என்று ஒன்று இருப்பது பிரிட்டிஷாருக்குத் தெரியும். பொதுவாக கீழ் நாடுகள்—மேல் நாடுகள் கலாசார தாரதம்யம் இந்த ரீதியில்தான் முன்காலத்தில் இருந்திருக்கிறது.

டச்சுக்காரர் முதல் முதலாக 1596-ஆம் வருஷம் இந்தோ னேஷியாவுக்கு வந்தனர். ஆனல் இவர்களுக்கு முன்னல் அங்கே இந்தியரும், சீனரும் குடியேறி யிருக்கிறுர்கள். ஹிந்துக்கள் இரண்டாவது நூற்றுண்டில் வந்தவர்கள். முஸ்லிம்கள்

பதினைந்தாவது நூற்றூண்டில் வந்தவர்கள். அதிலிருந்து அங்கே இஸ்லாமிய மதம் பரவலாயிற்று. இப்போது அங்கு பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள்.

பல தீவுகளில், குறிப்பாக போர்னியோ, ஸெலிபஸ் ஆகியவற்றில் பூர்வகுடிகளான பாபுவான்கள், நெக்ரிட்டோஸ் ஆகியவர் இருக்கின்றனர். இப்போது அங்குள்ள அன்னிய ஆசியர்களில் முக்கால்வாசிப்பேர்கள் அராபியர். பல நூற்றூண்டுகளாக அராபியர் ஏடனுக்கு அருகிலுள்ள ஹாட்ராமாட் என்ற பிரதேசத்திலிருந்து இந்தோனேஷியாவில் குடியேறி வந்திருக்கிறார்கள். பாக்கி கால்வாசிப்பேர்கள் (மொத்த அன்னிய ஆசியர்களில்) இந்தியரும், சிங்களவருமாவர். இந்தோனேஷியத் தீவுகள் எல்லாவற்றிலும் பொதுவாகப் பேசப்படுவது மலாய் பாஷைதான்.

இதரத் தீவுகளைக் காட்டிலும் அதிகமாக ஹிந்து பண்பு இப்பொழுது பாலித் தீவில் இருப்பதைக் காணலாம். இத்தீவு மக்களின் நாட்டியக் கலை உலகப்பிரசித்தமானது. இந்த நாட்டியத்திற்கும், இந்திய நாட்டியங்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு உண்டு.

இந்தோனேஷியாவில் இயற்கைச் செல்வங்கள் இருந்ததை 1596-ஆம் வருஷம் கண்ட டச்சுக்காரர்கள், டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியை 1602-ஆம் வருஷத்தில் ஹாலந்தில் ஆரம்பித்தார்கள். இதற்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்டதென்றாலும், டச்சுக் கம்பெனிதான் பிரிட்டிஷ் கம்பெனியைவிட செழிப்பாக இருந்தது. பிரிட்டனை விட ஹாலந்து அதிகமாக ஏற்றுமதிகளைச் செய்தது. 17-வது நூற்றூண்டில் வர்த்தகத்திலும், கடற்படை பலத்திலும், ஹாலந்து முதன்மையான வல்லரசாகத் திகழ்ந்தது. 1740-ஆம் வருஷத்தில் தான் ஏற்றுமதி செய்வதில் டச்சு நிலையை பிரிட்டன் அடைய முடிந்தது.

டச்சு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கொள்ளை கொள்ளையாக லாபம் கிடைத்து வந்தது. மிரட்டலை பக்க பலமாகக் கொண்டு வியாபாரத்தைப் பெருக்கியது. இரு நூற்றாண்டுகளுக்கு டிவிடெண்டுகள் 12½% முதல் 50% வரை கிடைத்துவந்தது. சுரண்டலை எதிர்த்த ஜாவா மக்களுடன் பலதடவை டச்சுக்காரர் போர் புரிந்திருக்கிறார்கள். 1740-ஆம் வருஷம் ஜாவாவின் சீனரை டச்சுக்காரர் படுகொலை செய்திருக்கிறார்கள்.

இந்தோனேஷியாவில் கம்பெனியின் நிர்வாகம் ஊழல் மயமாக இருந்தது. இது சம்பந்தமாக ஹாலந்திலேயே கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. "கிழக்கிந்தியத் தீவுகளில் நமக்குச் சாதகமாக எந்த அடிப்படையில், என்ன வகையில் வர்த்தகத்தை நடத்தலாம், எவ்வாறு நடத்தினால் ஹாலந்துக்கு அதிக லாபமும், இதர அனுகூலங்களும் கிடைக்கும், எந்த வகையில் அந்தத் தீவுகளை நிர்வகித்தால் ஹாலந்துக்கு அதிக நன்மையுண்டு" என்பதை விசாரித்து ரிப்போர்ட் சமர்ப்பிக்க டச்சுப் பார்லிமெண்டு 1807-ஆம் வருஷம் ஒரு கமிஷனை நியமித்தது.

இதற்குள்ளாக ஐரோப்பாவில் நெப்போலியன் கொடி உயர ஆரம்பித்தது. அப்பொழுது கீழ்க்கோடியில் டச்சுத் தீவுகளை பாதுகாக்கும் பொறுப்பை பிரிட்டிஷார் ஏற்றனர். ஐந்து வருஷகாலத்திற்கு—1811-1816—ஹாலந்தின் கீழ்க்கோடி காலனிகள் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தன. அந்த காலனிகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. பிற்பாடு இலங்கை நீங்கலாக பாக்கி காலனிகள் டச்சுக்காரரிடம் பிரிட்டிஷாரால் திருப்பிக்கொடுக்கப்பட்டன. டச்சுக்காரர் பின்பற்றியது 100க்கு 100 சுரண்டல் கொள்கையாகும். ஜாவாவிலும், சுமத்ராவிலும்தான் இவர்கள் கவனம் செலுத்தினர். இதரத் தீவுகளில் சுரண்டல் கொள்கையை ஆரம்பிக்கு முன்பு அங்கே மூலதனத்தைப் போட்டாக வேண்டும். இல்லாவிட்டால் பலன் ஏதும் கிடைக்காது. ஆனால் டச்சுக்காரர்

ஜாவா, சுமத்ரா ஆகியவற்றில் கிடைத்த லாபத்தை தாய் நாட்டிற்கு அனுப்ப விரும்பினர்களேயொழிய, பக்கத்துத் தீவுகளில்போட விரும்பவில்லை. சுதேசிகளுடைய நலனில் லவலேசமும் அவர்கள் அக்கறை காண்பிக்க வில்லை. இதை ஹாலந்தில் முற்போக்காளர் கண்டித்து ஜாவா மக்களுக்கு நன்மையைச் செய்ய வேண்டுமென வற்புறுத்தினர். 1905-ஆம் வருஷம், அதாவது இந்தோனேஷியாவில் முன்னூறு வருஷ காலம் டச்சு நிர்வாகம் இருந்த பிறகு, முதல் முதலாக இந்தோனேஷிய மக்களுக்கு ஹாலந்து சர்க்கார் உதவி செய்தனர். கம்பெனிக்குக் கொடுத்திருந்த நான்கு கோடி ப்ளோரினை, கம்பெனித் திரும்ப தனக்குத் தரவேண்டாமென்றும், ஆனல் அடுத்த 15 வருஷ காலத்திற்குள் சரி சமதொகையை (4 கோடி ப்ளோரினை) ஜாவா, மதுரா ஆகியவற்றின் பொருளாதார முன்னேற்றத்திற்காக கிழக்கு டச்சு இந்திய தீவுகள் சர்க்கார் செலவு செய்ய வேண்டுமென்றும் ஹாலந்து சர்க்கார் நிபந்தனை போட்டது. 1922-ஆம் வருஷ சட்டப்படி டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் ஹாலந்து ராஜ்யத்தின் ஒரு பகுதியாக்கப் பட்டது.

டச்சு மன்னர், டச்சு கிழக்கிந்தியத் தீவுகளுக்கு கவர்னர் ஜெனரல் ஒருவரை நியமிப்பார். அவர்தான் பொது நிர்வாகத்திற்கு பொறுப்பானவர். இந்திய வைஸ்ராய்க்கு உள்ள அதிகாரத்தை விட அவருக்கு அதிக அதிகாரம் உண்டு. அவருக்கு ஒரு நிர்வாக சபை உண்டு. அதில் 5 பேர்கள் இருப்பார்கள். "நிர்வாகத் திறமை" உள்ள ஸீனியர் ஸிவில் சர்விஸ்காரர்களுக்கு இந்த நிர்வாக சபையில் மெம்பர் பதவிகள் கிடைப்பதுண்டு. இரண்டு இந்தோனேஷியரை இந்த சபையில் சேர்த்துக்கொள்வதற்காக 1930-ஆம் வருஷம் சபை மெம்பர்களின் எண்ணிக்கை ஏழாக்கப்பட்டது.

இந்தத் தீவுகள் பல்வேறு ரெஸிடென்ஸிக்களாக பிரிக்கப் பட்டிருக்கின்றன. இவற்றை நிர்வகிப்பவர்கள் டச்சு ரெஸி

டெண்டுகள். ரெஸிடெண்டின் கீழ் ஐரோப்பிய அதிகாரிகளும் சுதேச அதிகாரிகளும் வேலைபார்க்கிறார்கள்.

ரெஸிடெண்டின் கீழ் வேலை பார்க்கும் பிரதான சுதேச அதிகாரிக்கு ரீஜண்ட் என்று பெயர். இவர் பண்டைய ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பார். ஆனால் மொத்தத்தில் தீவுகளின் நிர்வாகம் டச்சு அதிகாரிகளிடம் தான் உண்டு. இவர்களுக்கு கொழுத்த சம்பளம் தரப்படுகிறது. இந்தியாவைப்போல இந்தோநேஷியாவிலும் சுதேச சமஸ்தானங்கள் உண்டு. மொத்தம் 253 சமஸ்தானாதிபதிகள் இருக்கிறார்கள். (இந்தியாவில் மொத்தம் 562 சமஸ்தானாதிபதிகள் இருக்கின்றனர்.)

கல்வியில் இரண்டு ரகமுண்டு; சட்டங்களில் இரண்டு ரகங்களுண்டு; கோர்ட்டுகளில் இரண்டு ரகங்களுண்டு. ஒன்று ஐரோப்பியருக்காக; மற்றொன்று சுதேசிகளுக்காக!

1916-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 16-ந்தேதி சட்டப் பிரகாரம் இந்தோநேஷியாவில் ஜன சபை (Volksraad) அமைக்கப்பட்டது. இதன் முதலில் கூட்டம் 1920-ஆம் வருஷம் நடைபெற்றது. ஆலோசனை கூறவே இந்த சபைக்கு உரிமையுண்டு. சபையை குறிப்பிட்ட விஷயங்களிலேயே கவர்னர் ஜெனரல் கலந்து கொள்ளுவார்.

1916-ஆம் வருஷத்தில் இந்தோநேஷியாவுக்குச் சீர்திருத்தம் கிடைத்தது. சட்டசபைக்கு முன்னை விட அதிக அதிகாரம் வந்தது. மெம்பர்களின் எண்ணிக்கை 60க்கு உயர்த்தப் பட்டது. இவர்களில் 39 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் 21 பேர்கள் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். ஆனால் வோட்டுரிமை, ஜனத்தொகையில் ஒரு சதவிகிதம் பேர்களுக்குத்தான்!

செல்வக் களஞ்சியம்

இந்தோனேஷியாவில் இயற்கைச் செல்வங்கள் ஏராளமாக இருப்பதால் அதை "பஸிபிக்கின் செல்வக் களஞ்சியம்" என்றழைக்கிறார்கள். இதன் மீது ஹாலந்தின் பிடிப்பு இருப்பதால் தான் உலக வல்லரசுகளில் ஒன்றாக ஹாலந்து மதிக்கப்படுகிறது. இதன் முக்கிய உற்பத்திகள் உலக உற்பத்திகளில் எவ்வளவு சதவிகிதம் என்பதை கவனிப்போம்:

இந்தோனேஷிய உற்பத்தி			உலக உற்பத்தியில்
கொயினா	....	....	99%
மிளகு	....	....	82%
ரப்பர்	....	....	33·3%
டின்	....	....	16·9%
டீ	....	....	16·5%
கரும்பு	....	...	9%
அரிசி	....	....	6·7%
பாக்ஸைட்	....	....	5·9%
ஸோயா பீன்ஸ்	....	....	3·8%
பெட்ரோலியம்	...	....	2·7%
காப்பிக்கொட்டை	....	....	6%

இவற்றைத் தவிர பருத்தி, நிலக்கரி, இரும்பு, தங்கம், நிக்கல், துத்தநாகம் முதலியவையும் இங்கே உற்பத்தியாகின்றன. எண்ணெய் உற்பத்தியில் 6-வது பெரிய நாடு இந்தோனேஷியா. இங்கே வருஷத்திற்கு 57,000,000 பாரேல் எண்ணெய் உற்பத்தியாகிறது. இங்கேயுள்ள 170 சர்க்கரை தொழிற்சாலைகள் உலக சர்க்கரைத் தேவையில் ஐந்தில் ஒரு பங்கை பூர்த்தி செய்கின்றன. ஜாவா கைத்தொழில்களில் 15½ சதவிகிதம் தான் டச்சுக்காரருக்குச் சொந்தம். பிரிட்டிஷார், அமெரிக்கர், ஜப்பானியர் ஆகியவர்களுக்கு 61 சதவிகிதம் சொந்தம்.

பாக்கி 23½ சதவிகிதம் சீனருக்குச் சொந்தம். பெரிய ரப்பர், புகையிலைத் தோட்டங்கள் எல்லாம் பிரிட்டிஷாருக்கும், அமெரிக்கருக்கும் சொந்தமாயிருக்கின்றன.

இந்தோனேஷிய எண்ணெய் உற்பத்தியில் 40 சதவிகிதம் அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளின் கட்டுப்பாடுகளின் கீழ் இருக்கின்றன. அமெரிக்கா 1939-ஆம் வருஷத்தில் இந்தோனேஷிய கொயினவில் 99 சதவிகிதத்தை இறக்குமதி செய்தது; 62 சதவிகித மரவள்ளிக் கிழங்கு மாவை இறக்குமதி செய்தது; 76 சதவிகித ஆட்டுத் தோலை இறக்குமதிசெய்தது; 86 சதவிகித ரப்பரை இறக்குமதி செய்தது. இதனுல்தான் 1940-ஆம் வருஷம் எப்ரல் மாதம் 17-ந்தேதி அமெரிக்க வெளிநாட்டு மந்திரி கார்டல் ஹல் பின் வருமாறு கூறினர்போலும்:—

"டச்சு கிழக்கிந்தியத் தீவுகளின் அந்தஸ்தில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டால் பல நாடுகளின் நலன்கள் நேரிடையாக பாதிக்கப்படும். பசிபிக் சமுத்திர சர்வதேச உறவுகளில் டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் மிக முக்கியமானவையாகும். அந்தத் தீவுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டால், அல்லது அவற்றின் அந்தஸ்தில் சமாதான வகை யற்ற முறைகள் மூலம் மாறுதலை யுண்டாக்கினுல் அந்தத் தீவுகளின் அமைதி, பாதுகாப்பு ஆகியவை மாத்திரமின்றி பசிபிக் பிரதேசம் பூராவின் அமைதியும், பாதுகாப்பும் பாதிக்கப்படும்".

இந்தோனேஷியாவில் ரயில்வேக்கள், நிலக்கரிச் சுரங்கங்கள் ஆகியவை சர்க்காருக்குச் சொந்தமானவை. சர்க்காராலேயே அவை நிர்வகிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சுமத்ராவில் கிட்டத்தட்ட பாதிப் பிரதேசம் டச்சு கம்பெனி ஒன்றிடம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியின் பெயர் ஹாண்டல்ஸ்-வெரீனிங்கிங் (Handels-

Vereeninging). இதற்கு தலைமைக் காரியாலயம் ஆம்ஸ்டர் டாமில் இருக்கிறது. இதன் சேர்மன் ஹாலந்தின் மாஜி பிரதம மந்திரி டாக்டர் கோலீஜின்.

இந்தோனேஷியாவில் தொழிலாளருக்கு ஊதியம் ரொம்ப குறைவாகவே கிடைக்கிறது. தினசரி 5 சதத்திலிருந்து 18 சதம் வரை கிடைக்கிறது. இந்த நாட்டில் நிலத்தை வாங்க எந்த அன்னியனுக்கும் உரிமை கிடையாது. குத்தகைக் குத்தான் எடுத்துக்கொள்ளலாம். குடியானவன் வாங்கின கடனை திருப்பிக் கொடுக்காவிட்டால் கூட, அவனது நிலத்தை யாரும் ஜப்தி செய்ய உரிமை கிடையாது.

இந்தோனேஷியாவிற்கு ஏற்றுமதியாகும் பொருள்களை உற்பத்தி செய்கிற டச்சு கைத்தொழில்களில் (ஹாலந்தில் இருப்பவை) 80,000 டச்சுத் தொழிலாளர் வேலை செய்கிறார்கள். வருஷத்திற்கு இந்தோனேஷியாவிலிருந்து ஹாலந்துக்கு வரும் லாபம மூன்று கோடி இருபது லட்சம் பவுனாகும். இந்த லாபம் விநியோகமாகும் தொழில்களில் மேற்கொண்டு 80,000 டச்சுக்காரர்கள் வேலை பார்க்கிறார்கள்.

5

அரசியல் எழுச்சி

அடிமைப்பட்ட வகையில் இந்தோனேஷியாவை இந்தியா பின்பற்றியது. அரசியல் எழுச்சியில் இந்தியாவை இந்தோ நேஷியா பின்பற்றியது. இரண்டு நாடுகளிலும் முதலில் புகுந்தது 'கம்பெனி வியாபாரம்.' பிற்பாடு வியாபாரம் செழிப்பாக இருக்க நாட்டில் அமைதி நிலவ வேண்டும். நிலவும்படி தானே 'ஒரு| கை' பார்த்து விடவேண்டும். நிலை நாட்டப் பட்ட அமைதியை நீடிக்க, கையில் அதிகாரம் வேண்டும். பொருளாதாரச் சுரண்டலுக்கு துணையாகவும் தூணாகவும்

அரசியல் அதிகாரம் வேண்டும். இவ்வாறாக அந்நிய ஆதிக்கம் படிப்படியாக ஏற்பட்டு, ஆட்சி படிப்படியாக தேய்ந்து, மறைந்தது.

இந்தோனேஷியாவில் சென்ற நாற்பது வருஷ காலமாக நடக்கும் தேசிய இயக்கத்திற்கு இந்திய தேசிய இயக்கமே வழி காட்டியாக இருந்திருக்கிறது. இந்திய தேசிய காங்கிரஸே இந்தோனேஷிய தேசியவாதிகளுக்கு உற்சாக ஊற்றாக விளங்கி யிருக்கிறது. பெபின் சந்திரபால், கோகலே, திலகர், அரவிந்த கோஷ், மகாத்மாகாந்தி, நேரு முதலிய தலைவர்கள் எழுதிய புஸ்தகங்கள், செய்த பிரசங்கங்களும் எழுதிய கட்டுரைகளும் கொண்ட புஸ்தகங்கள் ஆகியவற்றை இந்தோனேஷியர் படித்து தேசிய ஆர்வம் கொண்டனர். இதை அறிந்த டச்சு அதிகாரிகள் அந்தப் புஸ்தகங்கள் மீதெல்லாம் தடைவித்தார்கள். மனமிருந்தால் வழி உண்டல்லவா? எனவே தடை என்ன செய்ய முடியும்? ரகஸ்யமாகத் தருவித்தார்கள் இந்தோனேஷியர். ஆளும் வர்க்கம் அந்தப் புஸ்தகங்களைக் கண்டு மிரளுவதால் அவற்றில் 'வெடி மருந்து' இருப்பது நிச்சயம் என்பது சுதேசிகளுக்கு ஊர்ஜிதமாயிற்று.

ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்ப்பதிலும் இந்தியாவில் இந்தியர் கையாண்ட சாத்விக முறைகளை தங்கள் தேசத்தில் இந்தோனேஷியர் கையாண்டனர். சத்யாக்கிரஹம் செய்திருக்கிறார்கள்; வரி கொடா இயக்கம் நடத்தி யிருக்கிறார்கள். இந்த சாத்விக முறைகளுக்கு முன்னால் அங்கேயும் ஒரு "1857 புரட்சி" நடந்திருக்கிறது. அது 1857-ஆம் வருஷத்திற்கு முன்பே நடந்தது. ஏனெனில் அடிமைப்பட்டதில் இந்தியாவை முந்திக் கொண்டதல்லவா இந்தோனேஷியா?

15-வது நூற்றாண்டுவரை ஜாவா, ஹிந்து நாடாக இருந்து வந்திருக்கிறது. இதர இந்தோனேஷியத் தீவுகளைக்

காட்டிலும் அதிகமாக ஜாவா, பாலி ஆகிய இரண்டிலும் ஹிந்து கலாச்சாரம் நன்ருக வேரூன்றியது.

பிற்பாடு இந்தோனேஷியத் தீவுகளில் இஸ்லாம் புகுந்தது. இந்தியாவிலிருந்து முஸ்லிம் மதப் பிரசாரகர்கள் வந்தனர். அப்போது இரு மதங்களுக்கிடையே மோதல் எதுவும் நேரவில்லை. ஜாவா முஸ்லிம் மன்னர், மகாபாரத வீரர்கள் வம்சத்தில் தாம் பிறந்தவரென்று பிரதாபத்துடன் சொல்லிக்கொள்வதுண்டு. ஜாவா அரண்மனையின் கடைசிக் கவிஞராக இருந்த பிரபல புலவர் ரங்கவார்ஷிதா, அர்ஜுன பரம்பரையைச் சேர்ந்தவர் ஒருவரே தமக்குக் குருநாதர் என்று அடிக்கடி பெருமையுடனும் விசுவாசத்துடனும் சொல்லிக்கொள்ளுவதுண்டு. இஸ்லாம் வந்த பிறகு வகுப்பு சௌஜன்யம் எவ்வளவு நன்ருக இருந்திருக்கிற தென்பதற்கே இந்த மேற்கோள்கள். ஒரே ஒரு உண்மையை மாத்திரம் குறிப்பிடவேண்டும். ஹிந்து—ஜாவனீஸ் காலத்திய ஜாவா சரித்திர சோபிதம், பிற்பாடு இல்லை. தேச பக்தி மாத்திரம் குன்ருது இருந்திருக்கிறது.

இந்தோனேஷியத் தீவுகளுக்கு டச்சுக்காரர் வந்து, தங்கள் 'வியாபாரத்தை' ஆரம்பித்தார்கள். தங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமென்று, ஜாவா பிரபுக்களுடைய வர்த்தகம், கப்பல் போக்குவரத்துத் தொழில் ஆகியவற்றை நசுக்கினுர்கள். ஏனென்ருல், இவற்றுடன் டச்சுக்காரரால் வெற்றிகரமாக போட்டி போட முடியாது. எனவே போட்டி இல்லாதிருக்க சுதேசிகளின் தொழில்களை ஒடுக்கினர். நிலத்தில் நிர்ப்பந்த வேலை முறையை டச்சுக்காரர் அமுலுக்குக் கொண்டு வந்தனர். இது குடியானவரை கசக்கிப் பிழிந்ததுடன், சுதேச மிராசுதார்களின் மானத்தை வாங்குவதாகவும் இருந்தது. நாகரீகத்தில் அந்நியரைவிட உயர்தவர்கள் என்ற பெருமையுடன் இருந்த இந்தோனேஷியர், இந்த அந்நிய இறுமாப்பை சகிக்கவில்லை. அவர்களுடைய சொல்லொணுத்துயரம், புரட்சி மூலம் பரிகாரம்தேட

முயன்றது—1825-30-ல். ரத்த வெள்ளம் ஓடிற்று. இதை இந்தியாவின் 1857-ஆம் வருஷப் புரட்சியுடன் ஒப்பிடலாம். இரண்டுக்கும் உடன்படியாகக் கிடைத்த பலன் ஒன்றுதான்.

டச்சுக் கிறிஸ்தவ பாதிரிமார்கள் முஸ்லிம் சுதேசிகளை மதம் மாற்றவும் முயற்சித்தார்கள். ஆனால் இது பலிக்கவில்லை. எதிர்ப்பு கடுமையாக இருந்தது. முஸ்லிம்கள், தங்கள் மதத்தின் பெயரால் அந்நியர்மீது போர் தொடுத்தார்கள். இதனால் கிறிஸ்தவ மதப் பிரசாரம் தடைப்பட்டது அப்போது முஸ்லிம்கள் அந்தப் போரை நடத்தி, தியாகங்களை செய்யாதிருந்தால் இந்தோநேஷியா, முஸ்லிம் நாடாக இல்லாமல் கிறிஸ்தவ நாடாகி யிருக்கும்.

இந்த நூற்றாண்டு ஆரம்பத்திலிருந்தே விடுதலை பெற இந்தோநேஷியரின் உறுதி பலப்பட்டு வந்தது. 1908-ஆம் வருஷம் பூதி உத்தமா (உத்தமமான முயற்சி) என்ற பெயரில் அரசியல் ஸ்தாபனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது மிதவாதிகள் ஸ்தாபனம். ஜமீன்தார்கள், மிராசுதார்கள், படித்த மேல் வகுப்பார், ஸிவில் சர்விஸ்காரர்கள் ஆகியவர்களே இதில் பெரும்பாலும் இருந்தார்கள். 1912-ஆம் வருஷத்தில் ஹாஜி ஸாமன்ஹோடி என்பவர் மகாஜனங்களுக்காக ராஜீய ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பித்தார். அதன் பெயர் ஸாரேகத் இஸ்லாம். இதற்கு ஜனங்களிடையே பிரமாத ஆதரவு இருந்தது. 20 லட்சம் மெம்பர்கள் அதில் இருந்தார்கள். முதல் மகாயுத்த காலத்தில் அந்நாட்டில் ராஜீய விழிப்பும், அரசியல் ஞானமும் பிரமாதமாயின. யுத்த காலத்தில் அரசியல் உணர்ச்சி மக்களுக்கு அதிகமாக ஏற்படுவது எல்லா அடிமை நாடுகளுக்கும் பொதுவாகும். யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நாடும் அதனதன் சுதந்திரத்தை காப்பாற்றிக்கொள்ளுவதை அடிமை மக்கள் பார்த்து, தாங்கள் பாதுகாக்க சுதந்திரம் இல்லையே, அதை எவ்வாறு அந்நிய எஜமானர்களிடமிருந்து கைப்பற்று

வது என்பதை ஆலோசித்து, சாத்தியமானல் யுத்த காலத்திலேயே கைப்பற்ற பிரயத்தனமும் செய்வது இயற்கையாகி விட்டது. எனவே, இந்த இயற்கைக்கு இந்தோனேஷியா விலக்கல்ல. முதல் மகா யுத்த காலத்தில், பிரட்டனிடமிருந்து இந்தியாவுக்குக் கிடைத்த "வாக்குறுதிகளே" ஹாலந்திடமிருந்து இந்தோனேஷியாவுக்கும் கிடைத்தன. "யுத்தம் முடிவடைந்ததும் டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளை சுயாட்சி நோக்கிக்கொண்டு போகப் போகிறோம்" என்று டச்சு சர்க்கார் 1916-ஆம் வருஷத்தில் உறுதி கூறினர்கள். வெறும் பசப்பு, முலாம் பூசிய வார்த்தைகள்.

மறுபடியும் அரசியல் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. அந்நிய ஆட்சி படிப் படியாக பணிந்து, படிப் படியாக சீர்திருத்தம் தர ஆரம்பித்தது. 1918-ஆம் வருஷத்தில் வோல்க்ஸ்ராட் (ஜன சபை) அமைக்கப்பட்டது. இது வெறும் ஆலோசனை சபை. இதில் சில மெம்பர்கள் ஸ்தலசபைகளால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். பாக்கி மெம்பர்கள் நியமன மெம்பர்கள். "சுயாட்சிக்கு சுதேசிகளை தயாரிப்பதில்" இந்த சபை அமைப்பு, "முதல் முயற்சியாக" இருந்தது. 1922-ஆம் வருஷமும், 1925-ஆம் வருஷமும் மேற்கொண்டு சீர்திருத்தங்கள் கிடைத்தன. தீவுகள், ரெஸிடென்ஸிகளாக பிரிக்கப்பட்டன. இவற்றை நிர்வகிப்பவர் ரெஸிடென்டுகள். இந்த ரெஸிடென்ஸிகள், ரீஜன்ஸிகளாக மேற்கொண்டு பிரிக்கப் பட்டன. இவற்றை நிர்வகிப்பவர்கள் சுதேசி ரீஜன்டுகள். இவர்களுக்குக்கீழ் டச்சு அதிகாரிகளும் சுதேசி அதிகாரிகளும் இருந்தனர். இந்த சீர்திருத்தத்தையும் குப்பைத் தொட்டியில் போடுவதாக இந்தோனேஷியர் சொன்னர்கள். அரசியல் அமைப்பு இறக்குமதியாக வேண்டாம் என்று கிளர்ச்சி செய்தார்கள். 1926-ஆம் வருஷம் நவம்பர் மாதம் பட்டேவிய மக்கள் அந்நிய அரசாங்கத்திடம் வெறுப்புக் கொண்டு, தந்திக்காரியாலயத்தைக் கைப்பற்றினர்கள். இயக்

கம் பரவியது. மூன்று மாதங்களுக்கு இந்தோனேஷியா பூராவி லும் பொது வேலைநிறுத்தம் இருந்தது. பயங்கர அடக்கு முறைகளால் புரட்சியை டச்சுக்காரர் ஒடுக்கினர். ஆனால் சுதேசிகளின் உள்ளத்தில் இருந்த சுதந்திரக் கனலை விதேசி களால் அணைக்க முடியவில்லை.

இந்தியாவில் ஆங்கிலோ-இந்தியர் இருப்பதுபோல இந்தோ னேஷியாவில் டச்சு-ஜாவாகாரர் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் பிறந்த தேசத்தையே தங்கள் தாய் நாடாகக் கொண்டு, இதர தேசிய வாதிகளுடன் சேர்ந்து தாய் நாட்டின் விடுதலைக்காக போராட ஆரம்பித்தார்கள். (இந்தியாவிலும் ஆங்கிலோ-இந் தியர் தேச பக்தியில் இதரர்களுக்கு மட்டமானவர்களல்ல என் பதை இப்பொழுது நிரூபிக்க முன் வந்துள்ளனர். போஸின் இந்திய தேசிய ராணுவத்தில் கர்னல் ஸ்டிரேஸி என்ற ஆங் கிலோ-இந்தியர் ஒருவர் இருந்தது குறித்து சென்னை காலேஜ் ஒன்றின் ஆங்கிலோ-இந்திய மாணவர் ஒருவர் பரம சந்தோஷ மடைகிறார். எந்த ஆங்கிலோ-இந்தியர்தான் பெருமையடைய மாட்டார்?)

நேரிடையான போராட்டம் தோல்வியடைந்தவுடன், அடுத்த போராட்டம் ஆரம்பமாகிறவரை மக்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காக இந்தோனேஷிய தேசியவாதிகள் நிர்மாணத் திட்டத்தில் இறங்கினார்கள். இதன் மூலம் அடுத்த போருக்கு மக்களை தயாராக்க வேண்டுமென்பதும் தலைவர்களுடைய நோக்கமாகும். தேசிய பள்ளிக்கூடங்களை அவர்கள் ஆரம்பித் தார்கள்.

1936-ஆம் வருஷத்தில் வாக்ஸ்ராடில் (ஜன சபை) டொமி னியன் அந்தஸ்து கோரும் தீர்மானம் ஒன்றை மிதவாதத் தலைவர் முகமமத் தாம்ரின் என்பவர் கொண்டு வந்தார். தீர் மானம் நிறைவேறியது .ஆனால் ஏகாதிபத்திய சர்க்கார் இதற்கு

செவி சாய்க்க வில்லை. இத்துடன் சுதேச மிதவாதிகள் செல்வாக்கும் குறைய ஆரம்பித்தது. பரிபூர்ண சுதந்திரம் கோரும் தீவிரவாதிகளின் செல்வாக்கு அதிகமாயிற்று. மிதவாதத் தலைவர்கள் ஸோட்டாமு, தாம்ரின் ஆகியவர்கள் முறையே 1938-ஆம் வருஷத்திலும் 1941-ஆம் வருஷத்திலும் காலமானார்கள். தலைமை தானாகவே டாக்டர்கள் சுகர்ணு, ஹாட்டா, ஸ்ரீ சோமாத்ரி முதலிய இளந் தலைவர்கள் கைக்கு மாறிற்று.

6

டாக்டர் சுகர்ணு

சுகர்ணு 1901-ஆம் வருஷம் ஜாவாவில் சூராபாயா டவுனில் பிறந்தவர். இவருடைய தாயார் பாலினீஸ் ஹிந்து. தகப்பனார் ஜாவானீஸ் முஸ்லிம். அவர் பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தார். மகாபாரத கர்ணனைப்போல பெரிய வீரனாக சுகர்ணு விளங்க வேண்டுமென தகப்பனார் விரும்பினார்.

குழந்தை பிறந்த நான்கு வருஷங்களுக்கெல்லாம் இந்தோநேஷிய சுதந்திர இயக்கம் ஆரம்ப மாயிற்று. அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அவன் வளர்ந்து வந்தான். 18-வது வயதில் சுகர்ணு இளைஞர் தலைவனாக விளக்கினான். அவர் ஹைஸ்கூல் படிப்பை முடித்த பிறகு டெக்னிகல் காலேஜ் ஒன்றில் மேற்கொண்டு படிக்க பாண்டியாங்கிற்கு கிளம்பினார். அந்த ஊரில் இப்போதுள்ள அழகான மசூதி ஒன்றுக்கு பிளான் போட்டுக் கொடுத்தவர் சுகர்ணுதான். இவர் ஆவேசம் ததும்பும் பிரசங்கம் செய்வதில் மகா சமர்த்தர். காலேஜ் படிப்புக் காலத்திலேயே நல்ல பிரசங்கி. காலேஜில் படித்து தேறி, எஞ்ஜினீயர் பட்டம் பெற்ற பிறகு ஹாலந்துக்குச் சென்று எஞ்சினீயரிங்கில் மேற்கொண்டு படித்தார். அங்கிருந்து திரும்ப இந்தோநேஷியாவுக்கு வந்து, இந்தோநேஷிய தேசீயக் கட்சியை ஆரம்

வித்தார். அப்போது அவருக்கு வயது 27 தான். இரண்டு வருஷங்கள் கழித்து டச்சு அதிகாரிகள் அவரைக் கைது செய்து நான்கு வருஷ தண்டனை விதித்தனர். அவர் சிறையில் இரண்டு வருஷ காலம் இருந்த பிறகு மேற்கொண்டு சிறை வாசம் வேண்டாமென அவரை டச்சு கவர்னர் ஜெனரல் விடுவித்தார். அன்னிய சர்க்காரின் இந்த "தாராள மனப் பான்மை" சுகர்ணுவின் மனதை மாற்றவில்லை, விடுதலை பெற உறுதியைப் பலப்படுத்தியது. பல்வேறு ராஜீயக் கட்சியினரையெல்லாம் தமது தேசியக்கட்சிக் கொடியின்கீழ் ஒன்று திரட்டினர். இதைக் கண்ட டச்சு சர்க்காருக்கு சகிக்கவில்லை. அவரை மறுபடியும் 1933-ஆம் வருஷத்தில் கைது செய்தார்கள். அதற்கு அடுத்த வருஷத்தில் யாதொரு விசாரணையுமின்றி அவரை பிரஷ்டம் செய்து ப்ளோரஸ் தீவில் வைத்தார்கள். இந்த தீவு, டியார் தீவுக்கு அருகே இருக்கிறது. மலேரியாவில் அவர் மாண்டுபோவாரென டச்சுக்காரர் நினைத்தார் போலும். ஜாவாவில் தேசிய மிதவாதத் தலைவர்களெல்லோரும் சுகர்ணுவை டச்சு ஆட்சி நடத்தும் விதத்தைகண்டித்து அவரை விடுதலை செய்ய வேண்டுமென கோரினர். ஐந்து வருஷ காலம் நடந்த இந்தக் கிளர்ச்சியின் விளைவாக அவரை டச்சு சர்க்கார் சுமத்ராவிலுள்ள பென்கோலனுக்கு மாற்றினர். 1942-ஆம் வருஷத்தில் இந்தோனேஷியாவை ஜப்பானியர் கைப்பற்றிய சமயம்வரை சுகர்ணு அங்கேயே வைக்கப் பட்டிருந்தார்.

சுகர்ணு ப்ளோரஸில் வைக்கப்பட்டிருந்தபோதே ஜப்பானிய ஏகாதிபத்ய அபாயத்தைப் பற்றி எச்சரித்தார். இந்தோனேஷியர் தங்கள் நாட்டை பாதுகாப்பதற்காக பயிற்சி தரப்பட்டு, ஆயுதங்கள் அளிக்கப்படவேண்டுமென அவர் கூறினர். 1940-ஆம் வருஷம் ஹாலந்தை ஜெர்மனி தாக்கியபோது, அடிமையாவதிலிருந்து ஹாலந்தைப் பாதுகாக்க இந்தோனேஷியர் உதவிசெய்யத் தயார் என்று சுகர்ணு சொன்னர். இந்தோ

னேஷியாமீது ஜப்பானியர் உடனே படை யெடுக்கக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார். ஜப்பானியர் படையெடுத்தபோது, ஜவாவுக்குதம்மைக் கொண்டுபோகுமாறும், படையெடுத்தவனை எதிர்க்க ஜாவா மக்களை தாம் ஒன்று திரட்ட விரும்புவதாகவும் டச்சுக்காரரிடம சுகர்ணு சொன்னர். இதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை. சிறையிலேயே வைத்திருந்தனர்! ஜப்பானிய ரகசியப் போலீசார் சுகர்ணுவை சிறையிலிருந்து விடுவித்த போதிலும் அதே ஊரில் (பென்கோலன்) வீட்டில் காவலில் வைத்திருந்தார்கள். ஏனெனில் அவர் பாஸிஸ்ட்—எதிர்ப்பாளர் என்பது ஜப்பானியருக்குத் தெரியும். ஆனல் 1942-ஆம் வருஷம் ஜுலை மாதம் அவரை ஜப்பானியர் படேவியாவுக்குக் கொண்டு வந்தனர். அப்போதுதான் அவர், ஜப்பானியரைப் பொறுத்தவரை எந்தக் கொள்கையைப் பின்பற்றினல் இந்தோனேஷியா தனது சுதந்திர லட்சியத்தை அடைய முடியும் என்பது பற்றி தீர்க்க ஆலோசனை செய்து, ஒரு முடிவுக்கு வந்தார்.

டாக்டர் சுகர்ணு இந்தியாவிடம் ரொம்ப மதிப்பு வைத்திருக்கிறர். பல நூற்றுண்டுகளுக்குமுன் இந்தியர் செய்த நன்மையை அவர் மறக்கவில்லை. பல வகைகளில் இந்தியா, இந்தோனேஷியா இரண்டும் இன்று ஒரே நிலையில் இருப்பதையும் அவர் உணருகிறர். இந்தியர் பற்றி சமீபத்தில் அவர் கூறியதாவது:

“எங்களது இப்போதைய கலாச்சாரம் முழுக்க முழுக்க இந்தியரால் உருவாக்கப்பட்டது. 2000 வருஷங்களுக்கு முன்பு உங்கள் நாட்டிலிருந்து மக்கள் ஜாவாட்விப்பாவுக்கும் ஸ்வர்ணுட்விப்பாவுக்கும் சகோதரத்துவ அன்பு உணர்ச்சியுடன் வந்தார்கள். ஸ்ரீ விஜயா, மாதாம், மாத்ஜ பஹித் போன்ற சக்திவாய்ந்த ராஜ்யங்களை ஸ்தாபிக்க நீங்கள் எங்களுக்கு ஊக்கமளித்தீர்கள். நீங்கள் இப்பொழுதும் பூஜித்து வரும் கடவுள்களை பூஜிக்க நாங்கள் அப்பொழுது கற்றுக் கொண்டோம்; இப்பொழுதுகூட பெரும்பாலும் உங்களுடைய பண்பைப்

போன்றுள்ள பண்பை நாங்கள் படிப்படியாக சிருஷ்டித்திருக்கிறோம். பிற்பாடு நாங்கள் இஸ்லாமைத் தழுவினோம். ஆனால் அந்த மதம்கூட இந்தியாவிலிருந்துதான் வந்தது.''

இப்பொழுது இந்தியத் துருப்புகள் இந்தோனேஷிய சுதந்திரத்தை ஒடுக்குவதற்காக பிரிட்டிஷாரால் உபயோகிக்கப் படுவது குறித்து சுகர்ணு மன வேதனைப் பட்டு கூறியதாவது:

"இந்த சமயத்தில் இந்தோனேஷியாவில் எங்களுக்கு எதிராக வேலை செய்ய பல ஆயிரம் இந்திய ஸோல்ஜர்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இது, உங்களிடமுள்ள எங்கள் உண்மையான அன்பை எவ்வகையிலும் பாதிக்காது. இந்த ஸோல்ஜர்கள் ஜப்பானியரை நிராயுதபாணியாக்குவதிலும், காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுவதிலும் மாத்திரம் தங்கள் கவனத்தை செலுத்தி யிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எங்கள் விடுதலைப் போரை ஒடுக்க அவர்கள் அமர்த்தப்பட்டிருப்பது ரொம்பப் பரிதாபமாகும். எங்கள் மீது அவர்கள் பிரயோகிக்கப்படாமலிருந்தால், அவர்களுக்கும் என்நாட்டு மக்களுக்குமிடையே மனக் கசப்பு எழுந்திருக்காது; உங்கள் நாட்டு மக்களும் என் நாட்டு மக்களுக்குமிடையே உள்ள நல்லுறவுகளுக்கு களங்கமேற்பட காரணம் எதுவும் எழுவதற்கில்லை.''

7

சுதந்திர யுத்தம்

இந்தோனேஷியரின் இறுதி சுதந்திரப்போர், ஜப்பானியர் வந்ததுமே ஆரம்பமாய் விட்டதென்று சொல்ல வேண்டும். ஏனெனில் ஜப்பானியரையே தங்கள் விடுதலை லட்சியத்திற்காக முதலில் உபயோகித்துக்கொண்டு, பிற்பாடு அவர்களையும் வீழ்த்துவதென, தீர்க்கதரிசனம் வாய்ந்த டாக்டர் சுகர்ணு தீர்மானித்து விட்டார். மேலும் ஜப்பானியருடன் ஒத்துழைப்ப

தின் மூலம் மக்கள்மீதுள்ள பாஸிஸ பளுவை குறைக்கலாமென்றும், "ஆசியா ஆசியருக்கே" என்ற ஜப்பானிய கோஷத்தை தாங்களும் சாணக்கியமாகப் போட்டு, கூடுமானவரை அதிகாரத்தை பறித்துக் கொள்ளலாமென்றும் சுகர்ணுவும் அவரைப் பின் பற்றிய இதர தேசிய வாதிகளும் கருதினர். இப்பேர்ப்பட்ட கொள்கையை பின்பற்றுவதால் ரகசியமாக (அன்னிய ஆட்சிக்கு) எதிர்ப்பு இயக்கத்தை உண்டாக்க முடியும். இல்லையென்றால் ஒத்துழைக்க முடியாதென்று ஜப்பானியரிடம் பகிரங்கமாகச்சொல்லி அவர்களுடைய அதிக்ரமங்களுக்கு உடனே ஆளாக வேண்டும். சாணக்யமில்லாத சுமார் 200 இந்தோனேஷிய ராஜீயவாதிகள ஜப்பானியருடன் ஒத்துழைக்க முடியாதென பகிரங்கமாகச் சொன்னதால் தூக்கிலிடப்பட்டார்கள்.

டாக்டர் சுகர்ணுவின் கொள்கையே சரி என்பது பின்னால் ருசுவாகிவிட்டது. அவர், ஜப்பானியர் வசம் தனது நாடு இருந்த சமயத்தில் யுத்தகால சர்க்காருக்குத் தலைவராக இருந்தார். ஜப்பானியருக்கென்றால் ஒரு விதத்திலும் தமது மக்களுக்கென்றால் ரகசியமாக வேறுவிதத்திலும் பேசியும், செயல்கள் புரிந்தும் வந்தார். அவர்மீதும், அவரது மந்திரிகள் மீதும் ஜப்பானிய ரகசியப் போலீஸார் கண்காணித்து வந்தனர். (ஜப்பான் சரணாகதியடைந்த சமயத்தில் சுகர்ணுவின் பிரசார மந்திரி அமீர் எஸ். ஜபருதின் ஜப்பானியரால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். தண்டனையை நிறைவேற்றுவதற்குள் ஜப்பானியர் சரணடைந்தனர்.) கண்காணிப்பு இருந்தபோதிலும் மந்திரிகளும், இதரத்தலைவர்களும் தீவுகள் பூராவிலும் தேசியக் கனலை மூட்டி வந்தனர்.

ஜப்பானியர் ஓரிரண்டு நல்ல காரியங்களையும் செய்தார்கள். ஸிவில் நிர்வாகம் பூராவுக்கும் இந்தோனேஷியரை நியமித்தனர். சிறிய இந்தோனேஷிய ராணுவம் ஒன்றையும் அவர்கள் திரட்டி அதற்கு பயிற்சி தந்து, ஆயுதங்களையும் கொடுத்தார்கள்.

ஜப்பானியர் இந்தோனேஷியாவில் இருந்த காலத்தில் உணவு, கால் நடைகள், மூலப்பொருள்கள் ஆகியவற்றை ஜாவாவிலிருந்து தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்தனர்; ஆனால் தங்கள் நாட்டிலிருந்து எந்த சாமான்களையும் இறக்குமதி செய்யவில்லை. இவ்வாறாக மூன்று வருஷகாலத்தில் கிராமாந்திரச் செல்வங்களை ஜப்பானியர் கொள்ளை கொண்டு போனார்கள். இந்தோனேஷியர் மனக்கொதிப்படைந்தனர். இந்தோனேஷியத் துருப்புகள் 1943-1944-1945-ல், ஐந்து தடவை ஜப்பானியரை எதிர்த்து மேற்கு ஜாவாவிலும், கிழக்கு ஜாவாவிலும், போர்னியோவிலும் போர்புரிந்திருக்கின்றன. இதில் பல நூறு இந்தோனேஷியர் மாண்டனர்.

ஜப்பானியர் வாக்குறிதிகளைத் தந்து இந்தோனேஷியரை ஏமாற்றப் பார்த்தனர். சுகர்ணேவும், டாக்டர் ஹாட்டாவும், டோக்கியோவுக்கு விஜயம் செய்த பிறகு 1943-ஆம் வருஷம் நவம்பர் மாதம் ஜப்பானியர் இந்தோனேஷியாவில் ஆலோசனைக் கவுன்ஸில் ஒன்றை ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். சீக்கிரம் சுயராஜ்யம் தரப்போவதாக 1944 செப்டம்பரில் ஜப்பானிய சர்க்காரே அறிவித்தது. ஆனால் சீக்கிரம் கிடைக்கவில்லை. இந்தோனேஷியத் தலைவர்கள் மேற்கொண்டு வற்புறுத்தினர். அதன் விளைவாக இந்தோனேஷிய சுதந்திரம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை விவாதிக்க பூர்வாங்கக் கமிட்டியொன்றை 1945-ஆம் வருஷம் ஜூலை மாதத்தில் ஜப்பானியர் கூட்டினர். இந்தோனேஷியாவுக்கு ஜனநாயக குடியரசு சுதந்திரம் வேண்டுமென்று இந்தோனேஷியத் தலைவர்கள் தீர்மானித்தார்கள். இனி தங்கள் வேஷத்தைக் கலைத்து ஜப்பானியரை சமாளிக்க தங்களுக்கு சக்தி இருப்பதாக அவர்கள் நம்பிக்கை கொண்டனர். தங்கள் விருப்பத்திற்கு மாறாக கோரிக்கை கிளம்புகிறதே என்று ஜப்பானியர் கவலைப்பட்டனர். ஆனால் கமிட்டியைக் கலைத்து மேற்கொண்டு ஜாவாவில் தொந்தரவுக்

காளாக அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில் அப்போதே கிழக்கோடி யுத்தத்தில் தங்களுக்குத் தோல்வி நிச்சயம் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது.

1945-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி ஜப்பானியர் சரணடைந்தனர். சரணாகதிச் செய்தியை இந்தோநேஷியருக்கு ஜப்பானியர் உடனே தெரிவிக்க வில்லை. இந்தோநேஷியர் தங்கள் சுதந்திரத்தை பிரகடனம் செய்வதென ஆகஸ்டு 17-ந் தேதி தீர்மானித்து அதற்கடுத்த தினமே தங்கள் குடியரசை ஸ்தாபித்து, அரசியலமைப்பை நிறுவினர். அப்பொழுது ஜப்பானியர் மனக்கலக்கமடைந்தார்கள். அவர்களை வெறுக்கும் ஜனங்கள் அவர்கள்மீது பாய்வார்களோ என்று பயந்தனர். எனவே, அவர்கள் தாங்களே சிருஷ்டித்த இந்தோநேஷிய ராணுவத்திடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றவும், ராணுவத்தைக் கலைத்து விடவும் முயற்சித்தனர். ஆனால் இந்தோநேஷிய ராணுவம் எதிர்க்க ஆரம்பித்தது; ஜப்பானியரிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றி அநேக ஆயிர ஜப்பானியரைக் காவலில் வைத்தது. ஜப்பானியர் மவுண்ட் பேட்டனின் (நேச தென்கிழக்கு ஆசிய பிரதம தளபதி) சரணாகதி உத்தரவை மீறி தாங்களாகவே ஆயுதங்களை இந்தோநேஷியரிடம் கொடுத்ததாகச் சொல்லுவது தவறு. ஒரு சில பேர்கள் தாங்களாகவே கொடுத்திருக்கலாம். ஆனால் மிகப் பெரும்பாலான ஜப்பானியரிடமிருந்து இந்தோநேஷியர்தான் ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள். சூராபாயா, ஸமராங், பாண்டோயங், ஸோரகார்ட்டா ஆகியவற்றில் ஜப்பானியருடன் இந்தோநேஷியர் சண்டை போட்டு ஆயுதங்களைப் பறித்து அவர்களைக் காவலில் வைத்தனர். ஜாவாவில் பாதிக்கு மேற்பட்ட ஜப்பானியப் படைகளை நிராயுதபாணிகளாக்கியவர் இந்தோநேஷியர்தான்.

1942-ஆம் வருஷக் கடைசியில் ஹாலந்து ஹிட்லர் வசமும், இந்தோனேஷியா ஜப்பானியர் வசமும் இருக்கையில் ஹாலந்து ராணி வில்ஹெல்மினு, யுத்தம் முடிவடைந்த பிறகு டச்சு சாம்ராஜ்யத்திற்குள் இந்தோனேஷியாவுக்கு சுயாட்சி தரப்போவதாக வாக்களித்தார். அப்போது அந்த ராணி அம்மாவின் அரசாங்கமே அகதி அரசாங்கமாக லண்டனில் இருந்தது. அவர்கள் கதி அப்படியானபோதுகூட, காலனிகளை மறக்கவே இல்லை! தரித்திரம், சாம்ராஜ்யத்திற்குள் சுயாட்சி தருவதாக வாக்குறுதி! வாக்குறுதிதான், சிரஞ்சீவி வரம்பெற்ற வாக்குறுதியாகவே இருக்கப் போவதால், பூர்ண சுதந்திரம் தரப் போகிறோம் என்றுவது சொல்லி யிருக்கலாமல்லவா? பேச்சில் கூட கஞ்சத்தனம்! சாம்ராஜ்யத்திற்குள் சுயாட்சிக்கு அரசிய லமைப்பை இந்தோனேஷியரே அமைத்துக் கொள்ளலாம் என்றார். இதை கிரிப்ஸ்திட்டத்தோடு ஒப்பிடலாம். இந்தோனேஷிய தேசியத் தலைவர்கள் தங்கள் போராட்டத்திற்கு உற்சாகத்தை இந்திய தேசிய காங்கிரஸிடமிருந்து பெற்றதுபோல, டச்சு ஏகாதிபத்தியம் தனது பரிபாலனத்திற்கு பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை காப்பியடித்துவந்தது.

ஆனால் இதைப்போல வாக்குறுதிகளுக்காகவோ அல்லது 'சாம்ராஜ்யத்திற்குள் சுயாட்சிக்காகவோ' இந்தோனேஷியர் காத்திருக்கவில்லை. அவற்றை அவர்கள் விரும்பவும் இல்லை. பரிபூர்ண சுதந்திரத்தை அடைய உறுதி கொண்டு, மிகவும் சாணக்கியம் பொருந்திய கொள்கையை பின்பற்றி வந்தார்கள் அவர்கள் ஜப்பானியரையும் எதிர்த்து, 1945-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் குடியரசு பிரகடனம் செய்து, சுதந்திர சர்க்காரையும் அமைத்ததும டச்சு ஏகாதிபத்தியம மீண்டும் வாலாட்ட ஆரம்பித்துவிட்டது. டாக்டர் சுகர்ணு 'ஜப்பானிய ரின் கையாள், சுகர்ணு சர்க்கார் ஜப்பானியரின் 'பொம்மை சர்க்கார்' என்றெல்லாம் வீண்பழி சுமத்தியது. சுபாஷ்

போஸைப் போலவே சுகர்ணுவும் தனது ாய் நட்டின் நலன் ஒன்றுக்காகவே, சுயேச்சையான மனப்பான்மையுடன் ஜப்பானியருடன் ஒத்துழைத்து வந்திருக்கிறார். ஜப்பானியருக்கு பணிந்து விடவில்லை. தனது நாட்டின் சுதந்திரத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி, டோக்கியோவுக்கும் சென்று வந்திருக்கிறார். ஜப்பானியரை எந்த சமயத்திலும் சுகர்ணுவின் தேசீய சர்க்கார் கவிழ்த்துவிடும் என்பதை உணர்ந்தே இந்தோனேஷிய மந்திரிகளையும் ராஜீயத் தலைவர்களையும் ஜப்பானிய ரகஸியப் போலீஸார் கண்காணித்துவந்தனர். சுகர்ணுவை 'ஜாப் ஜெண்ட்' என்று வர்ணித்து ஒழித்து விடலாம் என்று டச்சு ஏகாதிபத்தியம் செய்த சூழ்ச்சி பலிக்கவில்லை.

டச்சுக்காரர் திரும்பவும் வருவதை இந்தோனேஷியர் விரும்பவே இல்லை. அப்படி அவர்கள்மாத்திரம் வந்திருந்தால் அவர்களை நிச்சயமாக இந்தோனேஷியர் விரட்டியடித்திருப்பார்கள். டச்சுக்காரருக்கு பிரிட்டிஷாரின் சகாயம் கிடைத்தது. குட்டி ஏகாதிபத்தியத்திற்கு பெரிய ஏகாதிபத்தியத்தின் உதவி. இந்திய, சீன, ஆஸ்திரேலிய, நியூஜிலாந்து கப்பல் துறைத் தொழிளாலர்கள் இந்தோனேஷிய மக்களிடம் தங்கள் அனுதாபத்தை காண்பித்தார்கள். இந்தோனேஷியாவுக்கு டச்சுக்காரர்களை அல்லது அவர்களுக்காக ஆயுதங்களை கப்பல்களில் ஏற்ற முடியாதென அவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

பிரிட்டன் மாத்திரம் தனது பிடிவாதத்தை விடவில்லை. இந்தோனேஷியாவில் ஜப்பானியத் துருப்புகளை நிராயுதபாணிகளாக்கும் பொறுப்பு தங்களுக்கு உண்டு என்றது. இந்தோனேஷியா இந்தோனேஷியருக்கே என்பதை பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டிருந்தால், ஜப்பரனியரை நிராயுதபாணிகளாக்கும் பொறுப்பை இந்தோனேஷியாவிடமே விட்டிருப்பார்கள். அல்லது அவர்களுக்கு இந்த வேலையில் உதவி செய்திருப்பார்கள்.

ஆனல் இந்தோனேஷியாவின் எதிர்காலம் இந்தோனேஷியா, ஹாலந்து இரண்டின் கையிலும் இருக்கிறது என்று பிரட்டன் நம்புவதால் அவ்வாறு செய்யவில்லை. பிரட்டிஷ் துருப்புகள், தாங்கள் இந்தோனேஷியாவுக்கு வந்ததுமல்லாமல், டச்சுத் துருப்களையும் வரவழைக்க முனைந்தன. முதலில் பிரிட்டிஷாரை இந்தோனேஷியர் எதிர்க்கவில்லை. "எங்களுக்கும் டச்சுக்காரருக்குமிடையே உள்ள பிரச்சனையை நாங்களே தீர்த்துக் கொள்ளுகிறோம். நீங்கள் தலையிடாதிருங்கள்" என்றே சொன்னர்கள். ஆனல் இதற்கு பிரிட்டிஷார் சம்மதிக்கவில்லை. "ஆயுதங்களை கீழே வையுங்கள்" என்று இந்தோனேஷியருக்கு உத்தரவிட்டனர். ஆயுதங்களை கொடுத்து விட்டால், குடியரசு ஒழிந்து, மறுபடியும் டச்சு ஏகாதிபத்ய ஆட்சியே ஏற்படுமென்பதை நன்ருக உணர்ந்த சுதேசிகள், பிரிட்டிஷ் கோரிக்கைக்கு இணங்கவில்லை. இந்த சமயத்தில் பிரிட்டிஷ் பிரிகேடியர் மல்லபி 'கொல்லப்பட்டதும்' பிரிட்டிஷாருக்கு சரியான ஸால்ஜாப்பாக ஆயிற்று. சண்டையில்தான் மாண்டார் என்று பிற்பாடு தெரியலாயிற்று. சூராபாயாவை பிரிட்டிஷ் விமானங்களும் கடற்படை பீரங்கிகளும் தரைப்படை பீரங்கிகளும் தாக்கின. இதனல் ஆயிரக்கணக்கான இந்தோனேஷிய துருப்புகளும் ஸிவிலியன்களும் மாண்டும், காயமடைந்துமிருக்கிருர்கள். பிரிட்டிஷ் தலையீட்டை டாக்டர் சுகர்ணு கண்டித்தும் பிரயோசனமில்லை.

இந்தோனேஷியாவில் சுதந்திரக் கிளர்ச்சியை பிரிட்டிஷார் ஒடுக்குகிருர்கள் என்ற குற்றச்சாட்டை ஐக்ய நாடுகள் சங்கத்திற்கு உக்ரேன் கொண்டு வந்தது. கொண்டுவரப்போகும் விஷயம் இந்தோனேஷிய குடியரசு சர்க்காருக்கு முன் கூட்டி தெரியவே தெரியாது.

சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை இந்தோனேஷியாவுக்கு அனுப்ப வேண்டுமென்பதே ஐக்ய நாடுகள் சங்கக் கவுன்

ஸிலுக்கு வந்த உக்ரேன் பிரேரணை. "இந்தோநேஷிய மக்கள் மீது யுத்தம் நடத்தப்படுகிறது. இது மிகவும் அபாயகரமான நிலைமையாகும். இதிலிருந்து கிளம்பக்கூடிய தீப்பொறி, வெடி மருந்து கிடங்குகளுக்குச் சென்று, உலகமெங்கும் கொந்தளிப்பை ஆரம்பித்துவிடக்கூடும்." என்று பாதுகாப்பு கவுன்ஸிலில் ரஷ்யப் பிரதிநிதி வைஷின்ஸ்கி கூறினர். பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, சீனு, ஹாலந்து ஆகியவற்றின் பிரதிநிதிகள்கொண்ட சர்வதேச விசாரணைக் கமிஷன், இந்தோநேஷியாவுக்குச் சென்று, நிலைமையை நேரில் பார்த்து, தகவல்களை சேகரித்து வரவேண்டும் என்றும் ரஷ்யப் பிரதிநிதி முறையிட்டார். ஆனுல் பலன் கிடைக்கவில்லை. விசாரணைக் கமிஷனை அனுப்பவேண்டும் என்ற உக்ரேனின் பிரேரணையும், ரஷ்யா, பிரிட்டன் அமெரிக்கா, சீனு, ஹாலந்து ஆகியவற்றின் பிரதிநிதிகள் போய் தகவல்களை கொண்டுவரலாம் என்ற ரஷ்ய யோசனையும் பாதுகாப்பு கவுன்ஸிலில் தோல்வியடைந்தன. உக்ரேனின் பிரேரணைக்கு சாதகமாக போலந்து, ரஷ்யா இரண்டுமே வோட் செய்தன. (உக்ரேனுக்கு வோட் கிடையாது.) ரஷ்ய திருத்தத்திற்கு ரஷ்யா, போலந்து, மெக்ஸிகோ ஆகிய மூன்றின் வோட்டுக்களே கிடைத்தன. "பிரிட்டிஷ் துருப்புகளை (இந்திய துருப்புகள் உள்பட) இந்தோநேஷியரின் தேசிய இயக்கத்திற்கு விரோதமாக உபயோகிக்கலாகாது. ஜப்பானியரை நிராயுதபாணிகளாக்கி, யுத்தக் கைதிகளையும் காவல் கைதிகளையும் விடுதலை செய்த பிறகு பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸாகிவிடவேண்டும். இப்பொழுது பட்டேவியாவில் நடக்கும் டச்சு-இந்தோநேஷிய சம்பாஷணைகளின் போக்கு, இந்த கவுன்ஸிலுக்கு தெரிவிக்கப்படவேண்டும்" என்று எகிப்துப் பிரதிநிதி கொண்டுவந்த பிரேரணையும் தோல்வி யடைந்தது. பிரேரணைக்கு சாதகமாக எகிப்து, போலந்து இரண்டின் வோட்டுக்கள்தான் கிடைத்தன. இவற்றிற்கெல்லாம் எதிராக தங்கள் வோட்டுக்களை கொடுத்ததின் மூலம் பிரிட்டன், அமெரிக்கா,

சீனு ஆகியவை இந்தோனேஷிய சுதந்திர இயக்கத்திற்கு செய்துள்ள துரோகத்தை சரித்திரம் மறக்காது.

சீனு துணிவான வழியை பின்பற்றி யிருக்கவேண்டும். இந்தோ-சீனுவிலும், இந்தோனேஷியாவிலும் அந்நிய ஏகாதிபத்தியங்கள் மறுபடியும் ஸ்திரமாவது சீன நலன்களுக்கு ஏற்றதல்ல. ஆனுல் அது எதையும் சொல்லக்கூடிய நிலையில் இல்லை போலும்! ஐரோப்பாவில் ஹாலந்தே யுத்த முற்காலத்தில் சீனுவின் காலனியாக இருந்ததாக வைத்துக்கொள்வோம். நாஜி ஆக்ரமிப்பு ஒழிந்த பிறகு மீண்டும் அங்கே ஹாலந்துக்காரர் ஆட்சி ஏற்படுவதற்கு பதிலாக சீனர் தங்கள் ஆட்சியை திணிக்கப் பார்த்தால், பக்கத்து ஐரோப்பிய நாடுகள், குறிப்பாக பிரிட்டனும் பிரான்சும் சும்மா யிருக்குமா? அதேபோல ஆசிய நாடுகளிடையே போதிய ஐக்கியம் இல்லாதது வருந்தத் தக்கதாகும். ஆசிய அடிமை மக்களிடையே மாத்திரம் ஒற்றுமை நிலவி பிரயோசனமில்லை. ஆசிய அடிமை மக்களிடம் ஆசிய சுதந்திர மக்களின், அந்த மக்களின் சுதந்திர சர்க்காரின், அநுதாபம் இருக்க வேண்டும். சமயத்தில் அந்த சர்க்கார் உதவி செய்ய முன் வரவேண்டும். பரிந்து சண்டை போடாவிட்டாலும், போடத் திறமை அல்லது பலம் இல்லாவிட்டாலும், ஐக்ய நாடுகள் சக்கம் என்ற மேடையிலாவது இந்தோனேஷியாவுக்காக சீனு பரிந்து பேசி யிருக்கலாம். அதைக்கூடச் செய்ய வில்லை. அதற்கு நேர்மாருக எதிராக வோட் செய்திருக்கிறது.

பண்டித நேரு சொல்லுவது போல இந்தோனேஷியாவுக்கு இந்தியர் எவ்வளவோ வகைகளில் உதவ விரும்புகிற போதிலும், வசதிகள் இல்லை. நிலைமையை நேரில் வந்து பாருங்கள், என்று நேருவுக்கு சுகர்னு ரேடியோ மூலம் அழைப்பு அனுப்பினுர். நேருவும் தமக்கு எவ்வளவோ முக்கிய அலுவல்கள் இந்தியாவில் இருக்கின்றபோதிலும், பாஸ்போர்ட் கிடைத்தால்

ஜாவா சென்று, இந்தோனேஷிய சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட சமரஸம் சாத்தியமென்ருல் அதற்காக தாம் பாடுபடத் தயாரென்றும் பதிலளித்தார். ஆனல் நேருவை பிரிட்டிஷ் சர்க்காரா அனுமதிக்கும்? பாஸ்போர்ட் தர மறுத்து விட்டார்கள். சண்டையில் ஈடுபடாத யாருக்கும் அங்கே ஜோலி இல்லையாம்.

1945-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 28-ந் தேதி 'இந்தோனேஷிய தினம்' இந்தியாவில் ராஷ்டிரபதியின் யோசனைப்படி அனுஷ்டிக்கப் பட்டது. இந்தியத் துருப்புகள் இந்தியாவின் சம்பந்தமின்றி மற்ருெரு நாட்டின் சுதந்திரத்தை ஒடுக்க பிரிட்டிஷாரால் உபயோகிக்கப்படுவதை கண்டித்து நாடெங்கும் ஜனங்கள் கூடி தீர்மானம் நிறைவேற்றினுர்கள். பிற்பாடு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய அசெம்பிளியின் முதல் கூட்டத்தில், முதல் பிரேரணையும் இந்தோனேஷியாவைப் பற்றிதான் இருந்தது. இந்தியத் துருப்புகள் உபயோகிக்கப் படுவதை கண்டித்து அசெம்பிளி ஒரு பிரேரணையை நிறைவேற்றியது. புதிய சபையில் சர்க்காருக்குக் கிடைத்த முதல் தோல்வி இதுதான். மறுபடியும் பிப்ரவரி 7-ந் தேதி அசெம்பிளியில் ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா, "இந்தோனேஷிய சுதந்திர இயக்கத்தை ஒடுக்க இந்திய ராணுவம் உபயோகிக்கப் படுவதை இந்திய மக்கள் பலமாகக் கண்டிக்கிருர்கள்" என்று சொன்னதற்கு, யுத்த இலாகா காரியதரிசி பிலிப் மேஸன், "சுதந்திரத்தை ஒடுக்க உபயோகிக்கப் படுகிறதென்பதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. ஆனல் இதுவிஷயத்தில் ஜனங்கள் உணர்ச்சியை சர்க்கார் அறிந்திருக்கிறது" என்ருர். "அசெம்பிளியில் கண்டனப் பிரேரணை நிறைவேறியதால் துருப்புகளை இந்தோனேஷியாவிலிருந்து வாபஸ் வாங்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறதா?" என்று ஸ்ரீ. ரங்கா கேட்ட கேள்விக்கு, "அதைப்போல உத்தரவு எதுவும் பிறப்பிக்கப் படவில்லை"

என்ற பதிலும் கிடைத்தது. சர்க்காருடைய சொந்த அபிப்ராயம் எது என்பதைக் குறித்து நமக்கு அக்கரையில்லை. ஜனங்களுடைய பிரதிநிதிகள் அளிக்கும் தீர்ப்புப் பிரகாரம் சர்க்கார் நடந்துகொள்ள வேண்டுமா, இல்லையா என்பதே கேள்வி. ஜனங்களின் உணர்ச்சி தெரியுமாம். தெரிந்தும் சர்க்கார் தனது எதேச்சாதிகார, ஏகாதிபத்தியப் போக்கிலிருந்து திரும்பாது! "பிரிட்டிஷ், இந்தியத் துருப்புகள் இந்தோனேஷியாவில் தங்கள் வேலையை பூர்த்தி செய்யப்போகும் தேதியை இப்போதே நிர்ணயிக்க முடியாது" என்று இந்தியா உதவி மந்திரி ஹெண்டர்ஸன் பிப்ரவரி 12-ந் தேதி பார்லிமெண்டில் அறிவித்தார். இந்திய துருப்புகளுக்கு பதிலாக வேறு திருப்புகளை அமர்த்த முடியாது என்றும் அவர் சொல்லி விட்டார். அடிமை நாட்டின் துருப்புகள், மற்றொரு நாட்டை அடிமையாக்குவதற்காக உபயோகிக்கப் படுகின்றன. இந்தோனேஷியாவில் உள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளில் 75 சதவிகிதம் இந்தியத் துருப்புகள் என்று குடியரசின் பிரதம மந்திரி ஷாரிர் கூறுகிறார். இந்தியாவுக்கு இவர் விடுத்த வேண்டுகோள்:

"உங்கள் மக்களும் என் நாட்டுமக்களும் நம்முடைய சுதந்திரங்களுக்காக போராடுகிறார்கள்- ஓரளவுக்கு நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் உங்கள் எஜமானர்களும் எங்கள் சமீபகால எஜமானர்களும் எங்களை உங்களுடைய ஆள் பலத்தைக் கொண்டு அடிமையாக்க சூழ்ச்சி செய்கிறார்கள். உங்களுடைய தார்மீக ஆதரவையும், அனுதாபத்தையுமே நாங்கள் எதிர்பார்க்க முடியும். அவை கிடைத்ததற்காக எங்கள் நன்றி. ஆனால் காரியம் தலைக்குமேல் போய்விடுவதற்குள், எங்கள் நாட்டிலிருந்து உங்கள் துருப்புகள் வாபஸாக உங்களுடைய மக்கள் வற்புறுத்தை வலுப்படுத்தி வெற்றி பெற்றால், அதுவே இந்நாட்டுக்கு இந்தியா செய்த மிகப் பெரிய சேவையாக இருக்கும்."

இந்திய துருப்புகள் வாபஸாக வேண்டும் என்று இந்திய மக்கள் தங்கள் பிரதிநிதிகள் மூலம், சட்ட சபையில் சொல்லி விட்டார்கள். ஆனால் மக்களின் ஆட்சி இந்தியாவில் இல்லாத தால் விருப்பத்தை செயலில் காண முடியவில்லை.

இந்தோனேஷிய சுதந்திர இயக்கத்தை ஒடுக்க ஜப்பானியத் துருப்புகளையும் பிரிட்டிஷாரும், டச்சுக்காரரும் உபயோகிப்பது மிகவும் வெறுக்கத் தக்கதாகும். இவ்வாறு உபயோகிப்பது, சரணாகதி நிபந்தனைகளுக்கே விரோதமானது.

பூர்ண சுதந்திரத்தை நிலைநாட்டுகிறவரை போரை நடத்தித் தீருவதென்றும், அதற்காக எல்லாத் தியாகங்களை யும் செல்வதென்றும் இந்தோனேஷியர் தீர்மானித்து விட்டார்கள்.

"சாம்ராஜ்யத்தில் சரிசம கூட்டாளியாகலாம்" என்று இந்தோனேஷியாவுக்கு 1935-ஆம் வருஷம் நவம்பர் மாத ஆரம்பத்தில் டச்சுக்காரர் ஒரு திட்டத்தை அனுப்பினார்கள். விவரங்களைப் பற்றி விவாதிக்க வட்டமேஜை கூடலாம் என்றும் யோசனை சொன்னார்கள். ஆனால் இந்த சூழ்ச்சிகளிலெல்லாம் சிக்க இந்தோனேஷியர் விரும்பவில்லை. இந்தோனேஷியரின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட சமரஸத்திற்கே தாங்கள் தயார் என்று பிரஸிடென்ட் சுகர்னு, உதவி பிரஸிடென்ட் ஹரட்டா, (இருவரும் நேருவின் நண்பர்கள்), பிரதம மந்திரி ஷாரிர் முதலிய தலைவர்கள் சொல்லி விட்டனர். டச்சு லெப். கவர்னர் வான் மூக், 1946-ஆம் வருஷம் பிப்ரவரி மாத ஆரம்பத்தில் ஹாலந்திலிருந்து கொண்டுவந்த "சமரஸ" திட்டத்தில், உடனடியான சுதந்திரமோ, அல்லது சுயநிர்ணய உரிமையோ இல்லை. திட்டத்தின் முக்கிய அம்சங்கள்: (1) இந்தோனேஷியாவிலுள்ள பல்வேறு கோஷ்டிகளிலிருந்து பிரதிநிதிகளை ஹாலந்து சர்க்கார் பொறுக்கி யெடுத்து,

அவர்களைக் கலந்து கொண்டு ஜனநாயக கூட்டாளி முறையை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு ஒன்றை வகுக்கும் உத்தேச மிருக்கிறது. (2) இந்த அரசியலமைப்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அமுலில் இருக்கும். சுயேச்சையான முடிவுக்கு மக்கள் வர அவசியமான நிலைமை ஏற்பட நடக்க வேண்டியவைகள் எல்லாம் அந்த குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி யாகுமென்று "நம்பப் படுகிறது." சுயேச்சையான முடிவை அறியுமுன் அந்த இடைக் காலத்தை மேற்கொண்டு நீடிக்க வேண்டுமா என்பது குறித்து அபிப்பிராய பேதம் எழுந்தால், அதை சமரஸமாக அல்லது அவசியமானல் மத்யஸ்தம் மூலம் தீர்த்துக் கொள்ளலாம். (3) இடைக்கால அரசியலமைப்பின் கீழ் "குறிப்பிடத்தக்க இந்தோநேஷியர் மெஜாரிட்டி" கொண்ட ஜனநாயக பிரதிநிதித்துவ சபை யொன்று அமைக்கப் படவேண்டும். பிரதிநிதித்வ சபையின் அரசியலுக்கு ஒத்துப் போகக் கூடிய மந்திரி சபையொன்று ஏற்பட வேண்டும். சர்க்கார் நிர்வாகத்திற்குத் தலைவரை (வைசிராய்) டச்சு சர்க்கார் நியமிக்கும். (4) அந்த வைசிராய்க்கு விசேஷ அதிகாரங்கள் உண்டு. (5) அரசியலமைப்பில் ஜாதிமத பட்சபாதமின்மை, மத சுதந்திரம், அபிப்ராய சுதந்திரம், மைனரிட்டி பாதுகாப்பு ஆகியவைகளுக்கு உத்தரவாத மளிக்கப் பட்டிருக்கும். (6) மேற்கண்ட அரசியலமைப்பு அமுலுக்கு வந்த பிறகு இந்தோநேஷிய காமன்வெல்த், ஐக்ய நாடுகள் சங்கத்தில் சீக்கிரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட, ஹாலந்து சர்க்கார் முயற்சிக்கும்.

இந்த சமரஸ திட்டம் இந்தோநேஷிய தேசியவாதிகளுக்கு திருப்தி யளிக்காததில் ஆச்சர்யம் எதுவுமில்லை. "பல வருஷங்கள் கழித்து சுயேச்சையான முடிவுக்கு இந்தோநேஷியர் வர டச்சுக்காரர் அனுமதிப்பார்கள் என்று திட்டம் சொல்லுகிறது. இதில் எனக்கு அக்கரையில்லை" என்கிறர்

பிரதம மந்திரி ஷாரிர். "திட்டத்தில் முன்னேற்றம் எதையும் நான் காணவில்லையே" என்கிறார் பிரஸிடென்ட் சுகர்ணு. "நியமன மெம்பர்கள்", "ஜனநாயகம்", "கூட்டுப் பங்காளி," "வைசிராய் நியமனம்" போன்ற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று முரணானவை. உலகத்தை ஏமாற்ற இந்த வார்த்தைகளைக் கொண்டு ஜாலவித்தை காண்பிக்கிறது டச்சு ஏகாதிபத்தியம். திட்டம், சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. மாரீச மான்!

பிரிட்டிஷார் தலையிட்டிராவிட்டால் இதற்குள்ளாக டச்சு ஏகாதிபத்தியத்தை இந்தோனேஷியர் கப்பலில் ஏற்றி யிருப்பார்கள். ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் கிழக்கே பரஸ்பரமாக ஒத்துழைக்க விரும்புகின்றன. அதனால்தான் டச்சுக்காரருக்கு மாத்திரமின்றி, பிரஞ்சுக்காரருக்கும் பிரிட்டிஷ் படையும், பிரிட்டிஷ் கட்டளைப்படி பிரிட்டிஷ்-இந்திய ராணுவமும் உதவி புரிகின்றன. ஜாவா, இந்தோ-சீனு இரண்டிலும் அமைதியை நிலைநாட்டுவதில்தான் தாங்கள் பங்கெடுத்துக் கொண்டதாக பிரிட்டன் சொல்லுகிறது. "சுதந்திர இயக்கத்தை ஒடுக்குவதில்" என்பதற்கு ஏகாதிபத்திய அகராதியில் உள்ள மாற்று வார்த்தைகள் "அமைதியை நிலை நாட்டுவதில்" என்பதாகும். இன்று இந்தோசீனு, ஜாவா சுதந்திரக் கிளர்ச்சிகள். நாளை இந்தியாவிலும் இப்படித்தானே வரும். எனவே, அப்போது பிரஞ்சு, டச்சு இரண்டின் உதவியையும் பெற இப்போதே முதலில் அவைகளுக்கு உதவி செய்து வைப்போம் என்று ஜான் புல் நினைக்கிறான் போலும்! மலாய்க்கு அடுத்தாற்போல இருக்கிறது சுமத்ரா, ஜாவா முதலிய இந்தோனேஷியத் தீவுகள். எனவே, இந்தத் தீவுகளுக்கு சுதந்திரம் கிடைத்தால், சுதந்திரக் கனல் விரைவாக மலாய், பர்மா, இலங்கை, இந்தியா, ஆகிய நாடுகளுக்குப் பரவும் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அஞ்சுகிறது போலும். அந்த

ஏகாதிபத்தியத்திற்கு இந்தோனேஷியாவில் சுதந்திர சர்க்கார் இருப்பதைக் காட்டிலும், டச்சு ஆட்சி இருப்பதில்தான் நிறைய அனுகூல முண்டு. மேலும், ஹாலந்தில் 100-க்கு 20 பேர்கள் தங்கள் காலனியாகிய இந்தோனேஷியாவை நம்பி வாழ்வதால், காலனிக்கு சுதந்திரம் கிடைத்தால் அந்த 20 சதவிகிதம் பேர் பாடு லாட்டரியாகி விடும். ஹாலந்தின் பொருளாதாரம் சீர்குலையும். இதனல் பிரிட்டன் உள்பட பக்கத்து நாடுகள் மறைமுகமாக பாதிக்கப்படும். இந்தோனேஷியாவுக்கு சுதந் திரம் கிடைத்தால் அங்கிருந்து இப்போது கிடைக்கிற விகிதத் திற்கு மூலப் பொருள்கள் பிரிட்டனுக்கு மேலும் கிடைக்குமா என்பதும் சந்தேகமே. இப்பேர்ப்பட்ட காரணங்களை முன் விட்டுத்தான், டச்சுக்காரருக்காக பிரிட்டிஷார் பரிந்து, கச்சங் கட்டியுள்ளனர். அடிமை வர்க்கங்களை ஒடுக்க ஆளும் வர்க்கங் கள் ஒன்று கூடுகின்றன. அதனல்தான் "ஆசியாவை விட்டு வெளியேறு" என்ற கோஷம் இந்தியாவில் கிளம்பி யுள்ளது. ஆளும் வர்க்கங்களை எதிர்த்து அடிமை வர்க்கங்கள் ஒன்று படுகின்றன. "ஆசியா ஒரே ஐக்கியம். இந்தியா, பர்மா, பிலிப்பைபன்ஸ், சீன ஆகியவை பூர்ண சுதந்திரமாக இல்லை யென்ருல், இந்தோனேஷியராகிய எங்களுக்கு பூர்ண சுதந் திரம் இருப்பதாக கருதமாட்டோம் என்று பிரஸிடென்ட் சுகர்னு 1946-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 5-ந் தேதி சொன் னர். "ஆசியாவை விட்டு வெளியேறு" கோஷம் இந்தோ நேஷியாவிலும் கிளம்பி விட்டது.

ஆசியா பூராவுமே இப்பொழுது கொந்தளிப்பான நிலை யில் இருக்கிறது. அடக்கி ஒடுக்கி இனி ஆள முடியாதென் பதை ஆளும் அந்நிய வர்க்கங்கள் நன்ருக உணருகின்றன. அதே சமயத்தில் ஆசிய 'சொத்துக்கள்' போனல் ஐரோப்பா வில் தங்கள் வாழ்க்கைத்தரம் குறைந்து விடும் என்பதையும் அவை அறிந்திருக்கின்றன. சௌஜன்யமாக வெளியேற

உடன்படிக்கை செய்து கொண்டால், பழைய படுமோசமான பொருளாதாரச் சுரண்டல்கள் சாத்தியமில்லை, சௌஜன்யமாக கிளம்பா விட்டால், சலுகைகள் கொஞ்சம்கூட கிடைக்காதே என்பதையும் அவை ஆலோசிக்க வேண்டும். எப்படியும் அந்நிய ஆட்சிகளை அடிமை மக்களின் சுதந்திர இயக்கம் கிளப்புவது நிச்சயமல்லவா? அவ்வாறு கிளப்பினுல், பிற்பாடு மாஜி எஜமானர்களுக்கு என்ன சலுகைகள் கிடைக்க முடியும்? எனவே சமரஸமாகப் போனுல், துவேஷம் குறைந்து அல்லது கண்யமாகப் போனுல் துவேஷம் மறைந்து, நியாயமான பொருளாதார உடன்படிக்கைகள் ஏற்பட வழியுண்டு. ஆசியாவை ஆளும் எஜமானர்களுக்கு இந்த வழியே சிறந்த வழியாகும். இதைப் பின்பற்ற அவர்கள் கண் திறக்கவேண்டும். இல்லாவிட்டால் சீக்கிரத்தில் அவர்களுடைய ஆட்சியை வெளியேற்ற அடிமை மக்களுக்கு போதிய பலம் ஏற்பட்டே தீரும். ஆளும் வர்க்கங்கள் ஆசியாவிலிருந்து போகத்தான் போகின்றன. தானுகப் போகுமா, தள்ளப்பட்டு போகுமா என்பதே கேள்வி.

8

ஸராவக்

ஸராவக் இதுவரை சுதந்திர தேசமாக வெள்ளைக்கார ராஜா ஒருவனின் ஆட்சியில் இருந்துவந்தது. இனி பிரிட்டிஷ் காலனியாக மாறப்போகிறது. உலகம் முன்னேறுகிறது என்ற கூற்றை மறுக்கிறது ஸராவக்கின் பின்னேற்றம். இதன் இப்போதைய (பிரிட்டிஷ்) ராஜா ஸர் சார்லஸ் புரூக், ஸராவக் மக்களுடைய அனுமதியைப் பெருமல், அந்த தேசத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சக்கரத்தில் கட்டுகிருர். பிரட்டனும் மகிழ்ச்சியுடன் காலனியாக அதை ஏற்றுக் கொள்ளுகிறது.

ஸராவக், போர்னியோவில் ஒரு பகுதி. இதன் விஸ்தீரணம் 50,000 சதுரமைல்கள். (இங்கிலாந்து, வேல்ஸ் இரண்டின் விஸ்தீரணத்தை விட அதிகமாகும்.) ஜனத்தொகை 5 லட்சம். (பூர்வகுடிகளான டயாக் ஜாதியினர், மலாய் ஜாதியினர், சீனர்.)

ரப்பர், தங்கம், எண்ணெய், மிளகு முதலியவை இங்கே உற்பத்தியாகின்றன.

போர்னியோவிலேயே ஸராவக்குக்கு பக்கத்தில் புரூனி என்ற ராஜ்யம் இருக்கிறது. 16-வது நூற்றாண்டில் இந்த புரூனியின் சுல்தான் ஆட்சியில் போர்னியோ பூராவும் இருந்திருக்கிறது. அதற்கு முன் அவர் ஜாவாவின் ஹிந்து மன்னருக்கு கப்பம் கட்டி வந்திருக்கிறார். வெள்ளைக்காரர்கள் போர்னியோவில் பிரவேசித்த பிறகு தீவின் ஐக்யம் சிதற ஆரம்பித்தது. 1841-ஆம் வருஷத்தில் சுல்தானை எதிர்த்து பூர்வகுடிகள் செய்த கலகத்தை ஒடுக்குவதற்கு ஜேம்ஸ் புரூக்ஸ் என்ற இங்கிலீஷ்காரர் உதவி புரிந்தார். இவர் ஒரு வியாபாரி. வர்த்தகத்தை முன்னிட்டு இங்கே வந்தவர். இவருக்கு அடித்தது அதிருஷ்டம். கலகத்தை ஒடுக்க பிரிட்டிஷார் ஒருவர் சகாயம் செய்ததை சுல்தான் ஸாகிப் மெச்சி, அவருக்கு ஸராவக்கை தானம் செய்து, ஸராவக்கின் ராஜாவாக்கினர். அவருக்கு அடுத்த வாரிசுக்கும் அடுத்த வாரிசுதான் இப்பொழுது பிரிட்டிஷ் காலனியாக இந்த சுதந்திர தேசத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று சமர்ப்பணம் செய்கிறார். இவருக்கு மகன் கிடையாது. அடுத்த வாரிசு இவரது சகோதரனின் மகன்தான். அவர் பெயர் அந்தோனி ஸராவக். ராஜா மூடா என்றும் அழைக்கப்படுகிறார். ஸராவக் காலனியாவதை இவர் ஆட்சேபிக்கிறார் "ஸராவக் பிரிட்டிஷாருக்குச் சொந்தமல்ல. சுதந்திர அந்தஸ்திலுள்ள இந்த தேசம், க்ரௌவுன் காலனி என்ற மட்டமான அந்தஸ்துக்கு கொண்டுவரப்படுவது விபரீதமாக இருக்கிறது. ராஜ்யத்துறையில் காலனிக் கொள்கை கட்டத்தை யெல்லாம் ஸராவக் முன்பே தாண்டி விட்டது. எனவே, மீண்டும் அ, ஆ, விலிருந்து ஆரம்பிப்பானேன்?" என்று ராஜா மூடா கேட்கிறார்.

இப்போதைய ராஜா ஸர் சார்லஸ் புரூக், நமது அந்தரங்கக் காரியதரிசியை ஸராவக்குக்கு அனுப்பி, அங்கே ராஜாங்க

சபையின் மெம்பர்களின் பெரும்பாலோருடைய கருத்தை அறிந்து விட்டதாகவும், பிரிட்டனிடம் காலனியாக ஒப்படைக்கலாம் என்பதே அந்த கருத்து என்றும் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் 1946-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 6-ந் தேதி காலனி மந்திரி அறிவித்தார். பிரிட்டிஷ் சர்க்கார் ஸராவக்கை காலனியாக ஏற்கத் தயார் என்றும் ஸர் ஜேம்ஸ் புரூக்கிடம் காலனி மந்திரி சொல்லிவிட்டாராம். ஸராவக்கின் ராஜாங்க சபை என்றால், அதில் எத்தனை நியமன மெம்பர்கள், எவ்வளவு தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள், ஜனங்களில் எவ்வளவு பேர்களுக்கு வோட்டுரிமை இருக்கிறது என்பதையெல்லாம் ஆராய்ந்தால், பெரும்பாலான மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக ஸராவக், பிரிட்டிஷ் ஆட்சிக்கு தரப்படுகிறதென்பதை அறிந்து கொள்ளலாம்.

பிறருக்கெல்லாம் பிரதேசங்களை தானதர்மம் செய்து கொண்டிருந்த புரூனி ராஜ்யம், சுருங்கியது. லாபுவான் தீவு 1846-ஆம் வருஷமும், போர்னியோவின் வடபாகம் பூராவும் 1877-ஆம் வருஷமும் பிரிட்டிஷ் வசமாயிற்று. புரூனி சுல்தானின் தடபுடலெல்லாம் குறைந்தது. அவரது ராஜ்யத்தின் விஸ்தீரணம் 2,226 சதுர மைலாயிற்று! ஜனத்தொகை 10,453!! (பிரிட்டிஷ் வட போர்னியோவின் விஸ்தீரணம் 30,000 சதுர மைல்கள். ஜனத்தொகை 2,70,000. ஸராவக் விஸ்தீரணம் 50,000 சதுர மைல்கள். ஜனத்தொகை 5,00,000).

கீழ்க்கோடியில் இவ்வாறு பிரிட்டிஷார் தங்கள் ஏகாதிபத்தியத்தை விஸ்தரிப்பது சரியல்ல. அவர்கள் தாய்நாடு எங்கேயோ ஐரோப்பாவில் இருக்கிறது. எனவே ஆசிய மக்கள் மீது தங்கள் ஆதிக்கத்தைச சுமத்தாமல் அவர்கள் ஆசியாவிலிருந்து வெளியேறினால்தான் நல்லது. இப்பொழுது போர்னியோவில் மிகப் பெரும்பாலான பகுதி டச்சிந்தீஸில் இருப்பதால், இதர பகுதிகளான ஸராவக், பிரிட்டிஷ் வட போர்னியோ, புரூனி ஆகியவை சுதந்திர இந்தோனேஷிய ராஜ்யத்தின் பகுதிகளாக இருப்பதே நியாயமாகும்.

டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகள்



அனுபந்தம் 1.

இந்தோநேஷியர் லட்சியம்

[குடியரசின் உப தலைவர் முகம்மத் ஹாட்டா]

இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்துவிட்டதால், நியாயமான, சாசுவதமான சமாதானம் ஏற்படவேண்டும் என்று எல்லா தேசங்களின் மக்களும் விரும்புகிறார்கள். இப்பொழுது முடிவடைந்துள்ள ஆறு வருஷ கால யுத்தம், பழைய பல்லவியே மறுபடியும் பாடப் பட்டதைக் கண்டது. இரு சாராரும் தாங்கள் உயரிய லக்ஷியங்களுக்காக போராடுவதாக பறை சாற்றினார்கள். ஆனால் "அட்லாண்டிக் சாஸனம்" தான் எல்லோருடைய மனதையும் கவருவதில் வெற்றியடைந்தது.

இந்தோனேஷிய சுதந்திரப் போராட்டம் நாற்பது வருஷங்களாக நடந்து வருகிறது. வெகு காலமாக அந்நிய ஆட்சி இருந்து வருவதின் விளைவாக அந்தப் போராட்டம் துவங்கியது. எனவே, யுத்த முடிவு, தங்கள் சுதந்திர தேசீய வாழ்வின் ஆரம்ப கட்டம் என்று இந்தோனேஷியர் கருதுகிறார்கள். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இந்தோனேஷியராகிய நாங்கள், சுதந்திர நாட்டில், சுதந்திர மக்களாக இருக்க அவசியமான நடவடிக்கைகளை யெல்லாம் மேற்கொண்டுள்ளோம்.

தற்காலத்திற்கேற்ற சுதந்திர அரசியலமைப்பை தயாரிக்கும் வேலை பூர்த்தியாகும் தருவாயில் யுத்தம் முடிவடைந்தது. புதிய அரசாங்கம் குடியரசாகவும், பூர்ண ராஜ்யாதிகாரம் மக்களிடம் என்ற அடிப்படையிலும், நாட்டில் நன்கு ஸ்திரமாகியுள்ள அரசியல் இயக்கங்களுக்கு அனுசரணையாகவும் இருக்கும். எதேச்சாதிகார அல்லது பாஸிய ஆட்சியின் சகல ரகங்களையும் இந்தோனேஷியர் எதிர்க்கிறார்கள். எல்லாருக்கும் சுதந்திரம் என்பதை அரசியலமைப்பு நன்கு வற்புறுத்துவதிலிருந்தே இதை தெரிந்து கொள்ளலாம். இந்த அரசியலமைப்பு ஏராள அதிகாரப் பொறுப்பை, தேசீய அசெம்பிளியிடம் தருகிறது. தேசீய அசெம்பிளி, பிரஸிடென்டை தேர்ந்தெடுத்து, அவரை தனக்கு (அசெம்பிளிக்கு) பொறுப்பாக்குகிறது. தேசீய அசெம்பிளியும், இந்தோனேஷிய வாழ்வின் எல்லாப் பிரிவுகளுக்கும்—கிராமவாசிக்கும், டவுன் வாசிக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும், சர்வகலாசாலைகளுக்கும், காலேஜ்களுக்கும், நாட்டின் கலாசார ஸ்தாபனங்களுக்கும், மற்றும் இதர பிரிவுகளுக்கும்

—ஜவாப் சொல்லியாகவேண்டும். மேலும், பிரஸிடென்டுக்கு மந்திரி சபை சகாயம் செய்யும். பிரஸிடென்ட்—மந்திரி சபை உறவு, கிட்டதட்ட, இப்பொழுது அமெரிக்காவில் உள்ள உறவு போல இருக்கும்.

பரஸ்பர ஒத்துழைப்பை உறுதியான அடிப்படையாகக் கொண்ட தேசீய வாழ்வை நிர்மாணிக்க இந்தோநேஷியர் ஆவலாக இருக்கிறார்கள். அப்போதுதான் பரிபூர்ண சமூக பாதுகாப்பு இருக்கும் என நாங்கள் நம்புகிறோம். அப்போதுதான் நாம் விரும்பும் "கூட்டுறவு காமன்வெல்த்" ஏற்பட முடியும் என்று நம்புகிறோம்.

எங்களுடைய இந்த அபிலாஷைகளெல்லாம், இந்தோநேஷிய குடியரசு அரசியலமைப்பில் இடம் பெற்றிருக்கிறது. சுதந்திர நாட்டுக்கு முதல் தேவை ஸ்திரமான சர்க்கார் என்பதையும், அந்தப் பூர்வாங்கத்தை செய்துமுடிக்க இந்தோநேஷியராகிய எங்களிடம் திறமையும் சாதனங்களும் உண்டு என்பதையும் நாங்கள் அறிவோம். உண்மை என்னவெனில், அதைப் போல சர்க்கார் அமைப்பின் அடிப்படைகள் இப்பொழுதே இந்தோநேஷியர் வசமிருக்கின்றன. ஜப்பானியர் இந்த நாட்டைப் பிடித்து வைத்திருந்தபோது இது சாத்தியமாயிற்று. ஏனெனில் ஏற்கனவே டச்சு அதிகாரிகளிடம் இருந்த முக்கியப் பதவிகளில் பெரும்பாலானவற்றை இந்தோநேஷியர் கைக்கு ஜப்பானியர் மாற்றினர். பாக்கி முக்கியப் பதவிகளும் இந்தோநேஷியர் கைக்கு மாறுவதற்காக பாடுபடுவதும் இந்தோநேஷிய சுதந்திர பூர்வாங்கக் கமிட்டி வேலைகளில் ஒன்றாகும்.

இந்தோநேஷியர் கைக்கு எல்லா அதிகாரத்தையும் மாற்றுவதில் கடைசி கட்டம் ஆரம்பமாகும் சமயத்தில் யுத்தமும் முடிவடைந்திருக்கிறது. எங்களைப் பொருத்த வரை, சமாதான காலம் திரும்புவதை மிக ஆவலுடன் வரவேற்கிறோம். ஏனெனில் சமாதான காலத்தில்தான், ஜனங்களுடைய சுபிட்சத்திற்காக திட்டங்களை நாங்கள் அமுலுக்குக் கொண்டுவர முடியும். சமாதான காலத்தில்தான் இந்தோநேஷியா, உலக செல்வ விருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் தன்னால் இயன்றதைச் செய்ய முடியும். இதை மனதில் வைத்துக்கொண்டுதான், நாங்கள் "இந்தோநேஷிய சுதந்திரத்தை அங்கீகரியுங்கள்" என்று எதிர்கால உலக அமைப்பை நிர்ணயிக்கும் வேலையில் இப்பொழுது ஈடுபட்டுள்ள உலக வல்லரசுகளை வேண்டிக்கொள்ளுகிறோம். உலக சமாதானத்தை பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சர்வதேச ஸ்தாபனத்திடமிருந்து உதவி பெறவும், யோசனை ஏற்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். உலக சுபிட்சத்தை நிர்மாணிக்க ஆள் பலத்தையும் பொருள் பலத்தையும் தர நாங்கள் ஆவலாக

இருக்கிறோம். ஆனால் சுய நிர்ணய உரிமையை எங்களுக்குத் தாருங்கள்; நாங்களாக தேர்ந்தெடுக்கும் சர்க்காரின் கீழ்—எங்கள் தேசியத் தேவைகளுக்கு ஏற்ற சர்க்கார் முறையின் கீழ்—நாங்கள் வாழ சந்தர்ப்பம் தாருங்கள். அப்பேர்ப் பட்ட நிலைமையில்தான் இந்தோனேஷிய மக்கள் தங்கள் நாட்டில் பாதுகாப்புடன் வாழ முடியும்; அப்பேர்ப்பட்ட நிலைமையில்தான், உலக பாதுகாப்பிலும், உலக சகோதரத்துவத்திலும் இந்தோனேஷியா தன் பங்கை நிறைவேற்ற முடியும்.

வரப்போகும் உலக அமைப்பு, இந்த யுத்தத்தில் கஷ்டப்பட்ட எல்லா நாடுகளின் அபிலாஷைகளுக்கும் ஏற்ற உலகை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும்; அட்லாண்டிக் சாஸனத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். இந்த அம்சங்களை யெல்லாம் முன்னிட்டு, உலக வல்லரசுகள் எங்களுடைய கட்சிக்கு நியாயம் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ளும் என்று இந்தோனேஷியராகிய நாங்கள் பரிபூர்ண நம்பிக்கைக் கொண்டிருக்கிறோம். எனவே, சுதந்திர தேசமாக இருக் கவும், பரிபூர்ண சமத்துவத்தில் இதர நாடுகளுடன் சேர்ந்து வாழவும், வேலை செய்யவும் எங்களுக்கு உரிமை உண்டு என பறைசாற்றுகிறோம்.

(டிஸம்பர், 1945.)

அனுபந்தம் 2.

அணுகுண்டால்கூட தடுக்க முடியாது

[பண்டித ஜவாஹர்]

இந்தோனேஷிய விடுதலைப் போரை தரையிலிருந்தும், கடலிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் குண்டுகளைப் பொழிந்து ஒடுக்கிவிடலாம் என்று யாரும் நினைக்கவேண்டாம். போர் நீடிக்கும்; ஜ்வாலை ஆசியாவின் இதர நாடுகளுக்குப் பரவும். இந்தோனேஷியாவில் இழைக்கப்படும் பயங்கரங்கள் குறித்து இந்தியர் மனம் கொதிக்கிறது. இதனால் நம் சொந்த சுதந்திரப் போர் வலுவடைகிறது. என்னைப் பொறுத்த வரை எந்த நிமிஷத்திலும் ஜாவாவுக்குக் கிளம்ப நான் தயாராக இருக்கிறேன். இப்போதைக்கு என்னை அனுமதிக்க டில்லி சர்க்கார் மறுத்திருக்கிறார்கள். நான் போக முடியாது. ஆனால் அந் நாட்டில் நடப்பவை, என் மனதிலும் உள்ளத்திலும் சர்வ சதா வியாபித்திருக்கின்றன. இந்தோனேஷிய சுதந்திரத்திற்கு உத்திரவாதமளிப்பதில் இன்னும் திறம்பாடாக தங்கள் பங்கை நிறைவேற்ற இந்திய மக்களுக்கு ஒரு காலம் வரப்போகிறதென்று நம்புகிறேன்

அப்போது இந்தோனேஷிய சுதந்திரத்தை மாத்திரமின்றி, இதர ஆசிய நாடுகளின் சுதந்திரத்தையும் இந்தியா பாதுகாக்கும்.

இன்று ஆசியப் பிரச்னையின் மிக முக்கிய அம்சம் இந்தோனேஷியப் போர் தான். ஏகாதிபத்திய மேலாதிக்கத்தை எதிர்த்து நடக்கும் புரட்சியின் சின்னம் அது. யுத்த காலத்தில் ஐக்கிய நாடுகள் பறைசாற்றிய லக்ஷியங்களுக்கும், சான்பிரான்ஸிஸ்கோ சாஸனத்தின் நான்கு வகை சுதந்திரங்களுக்கும், ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவைபற்றி எவ்வளவோ சொல்லப்பட்டதற்கும் அதுவே உரைகல். "ஐக்கிய நாடுகள்" சங்கம் தனது லட்சியங்களை அடிக்கடி பிரகடனப் படுத்தியபோது, அப்படியெல்லாம் அந்த சங்கம் உண்மையிலேயே செய்யுமா என்று நம்மில் அநேகர் சந்தேகப்பட்டோம். ஆனால் யுத்தம் முடிவடைந்து, இவ்வளவு சீக்கிரத்தில் அந்தக் கூற்றுக்கள் பொய்யாகுமென்று நம்மில் யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இதைவிட முக்கியமான உதாரணம் இருக்க முடியாது. இதோ இந்த தேசம் (இந்தோனேஷியா) இருக்கிறது. சுதந்திர கோரிக்கையில் இது ஒன்றுபட்டிருக்கிறதென்பதை யாராலும் மறுக்க முடியாது. தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், சுதந்திரத்திற்காக டச்சுக்காரர்களை மாத்திரமின்றி அவர்களுடன் வரும் இதரர்களையும் எதிர்க்கவும் தனக்கு சக்தி உண்டு என்பதை இந்த நாடு காண்பிக்கிறது. டச்சு சாம்ராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்காக இந்தோனேஷியாவை ஒடுக்குவதில் பிரிட்டிஷ் ராணுவம் தனது ஆயுத பலம் முழுமையையும் உபயோகிக்கிறது. நேச நாடுகளுக்கு சமீப காலம் வரை விரோதிகளாக இருந்த ஜப்பானியர் கூட இந்தோனேஷியருக்கு எதிராக உபயோகிக்கப்படுகிறார்கள். எல்லாவற்றையும்விட நமக்கு மிகவும் மானக்கேடானது, இந்திய துருப்புகள் உபயோகிக்கப்படுவதுதான்.

இந்தியாவிலுள்ள தொழிலாளர்களும் கப்பல் தொழிலாளர்களும் தங்கள் பொறுப்பை உணர ஆரம்பித்து, இந்தியாவிலிருந்து 'ஜாவாவுக்குச் செல்லும் கப்பல்களில் யுத்தப் பொருள்களை ஏற்ற மறுப்பதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தோனேஷிய விடுதலைப் போர், அதன் பிரமாத விளைவுகள் ஆகியவற்றின் முக்கிய அர்த்தபுஷ்டிகளை ஐரோப்பிய மக்களும், அமெரிக்க மக்களும் உணரவேண்டிய காலம் வந்துவிட்டதென அவர்களை எச்சரிக்கிறேன். இந்த விளைவுகளை அணுகுண்டால்கூட தடுத்துவிட முடியாது.

(17--11—45.)

புத்தகங்கள்

வே. சாமிநாத சர்மா :

சோவியத் ருஷ்யா (இரண்டாம் பதிப்பு) 4-8

டால்ஸ்டாய் :

கதைகள் (முதல் புத்தகம்) 2-4

கு. ப. ரா. மொழிபெயர்ப்பு

டால்ஸ்டாய் :

கதைகள் (இரண்டாவது புத்தகம்) 2-4

ரா. விசுவநாதன், குருசாமி மொழிபெயர்ப்பு

மஸானி :

இதுவா சோஷலிஸம் ? 1-0

கே. அருணசலம் மொழிபெயர்ப்பு

எம். ஜி. தேசாய் :

மஸானிக்கு சோஷலிஸ்டின் பதில் 0-8

ஆர். ராமநாதன் மொழிபெயர்ப்பு

மகாத்மா காந்தி :

இந்திய சுயராஜ்யம் 1-0

பரலி. சு. நெல்லையப்பர் மொழிபெயர்ப்பு

புதிய உலகம் 1-4

திருநெல்வேலி எஸ். சண்முகம்

தி. சு. அவிநாசிலிங்கம் :

திருக்கேதார யாத்திரை 1-4

ஜே. ஸி. குமரப்பா :

இயேசுநாதர் போதனை (அச்சில்)

'குமுதினி' மொழிபெயர்ப்பு

துர்கனேவ் :

ஜெய காதல் கீதம் 0-8

'காங்கேயன்' மொழிபெயர்ப்பு

கோத்தமங்கலம் சுப்பு :

மஞ்சி விரட்டு (அச்சில்)

கோத்தமங்கலம் சுப்பு :

மருக்கொழுந்து (கவிதைகள்) (அச்சில்)

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை, சென்னை — வடக்கு வெளி வீதி, மதுரை

வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர் — ஹைரோடு, திருநெல்வேலி

சேலம் லக்ஷ்மிவிலாஸ் பிரஸ், 50-51, வாலாஜா ரோட், சென்னை.